
பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

108

செந்தமிழறிஞர்கள்

ISBN : 978-81-686742-4-0





சுஜாதா

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

சுஜாதா




முரசு
40 வருடங்களுக்கு
முன்பு எழுத்தாளர்
சுஜாதா அளித்த பேட்டி
கேள்வி: இந்த நூற்றாண்டில் எவை எவை அழிந்து போகும்?
"கூட்டுக்குடும்பம், கல்யாணம்,
தாய்ப்பாசம், பிலிம் ரோல் சினிமா,
கடவுள் பக்தி, கவிதைகள்,
பெட்ரோல், சில பெரிய வியாதிகள்,
ரூபாய் நோட்டுகள்.
தற்கொலை மட்டும் பாக்கி இருக்கும்"

"முதல் மனைவி" என்பது புகழ்பெற்ற எழுத்தாளர் சுஜாதா (எஸ். ரங்கராஜன்) எழுதிய ஒரு பிரபலமான தமிழ் சிறுகதையாகும். இது, அவரது சிறுகதைத் தொகுப்புகளில் அடிக்கடி இடம்பெறும் தனித்துவமான, சுருக்கமான கதைசொல்லும் பாணியில் மனித உணர்வுகளையும் உறவுகளையும் ஆராய்கிறது. இக்கதை ஒலி வடிவங்களிலும் தழுவி எடுக்கப்பட்டுள்ளது.

"முதல் மனைவி"யின் முக்கிய அம்சங்கள்:

- **கருப்பொருள்:** உறவுகளின் சிக்கல்களைக் கையாள்கிறது, பெரும்பாலும் நுட்பமான உணர்ச்சி நாடகத்தின் மீது கவனம் செலுத்துகிறது.
- **ஆசிரியர்:** நாவல்கள், சிறுகதைகள், திரைக்கதைகள் உள்ளிட்ட தமிழ் இலக்கியத்தில் தனது பரந்த படைப்புகளுக்காக அறியப்பட்ட சுஜாதாவால் எழுதப்பட்டது.
- **கிடைக்கும் இடம்:** இச்சிறுகதை பெரும்பாலும் இணையத் தமிழ் இலக்கிய மன்றங்கள், விகடன்மற்றும் யூடியூப் ஒலிப்புத்தக வடிவங்களில் காணப்படுகிறது.

சுஜாதாவின் பாணிக்கு ஏற்ப, இந்தக் கதை விரைவாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளது; இது பெரும்பாலும் அவரது கதாபாத்திரங்களின் அகப் போராட்டங்களில் கவனம் செலுத்துகிறது.

Videos

01] முதல் மனைவி / சிறுகதை

https://www.youtube.com/watch?v=SBhNQucqqmc [23:54]

02] சுஜாதாவின் முதல் மனைவி (குறும்படம்)

https://www.youtube.com/watch?v=fW0OGDDcjHo [1:21:41]

முதல் மனைவி <<:>> சுஜாதா

https://www.vikatan.com/literature/arts/25961--2

கல்லூரியில் இருந்து திரும்பி வருவதற்குள் மழை பலமாகி, கடைசி பர்லாங்கில் ராஜலட்சுமி நனைந்துவிட்டாள். போதாக்குறைக்கு பஸ் ஒன்று உற்சாகமாக சகதியையும் சேற்று நீரையும் அவள் மேல் வாரி இறைத்துவிட, வீட்டு வாசலை அடையும்போது கோபம் மூக்கு நுனியில் துவங்கியிருந்தது. பால்காரன் வரவில்லை. மேனகா சாவியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டாள். பூட்டின வீட்டுக்குள் டெலிபோன் பிடிவாதமாக ஒலித்துக்கொண்டு இருந்தது. கோபம் இப்போது அவள் பார்வையை மறைத்தது. கைகளை இறுக்க அழுத்திக்கொண்டதால், ரத்தம் செத்து மணிக்கட்டு வெளுப்பாகி இருந்தது.

ராஜலட்சுமி, கோபத்தைக் குறை. கோபத்தைக் குறைத்தால்தான் பிளட் பிரஷர் விலகும். பால் வராவிட்டால் என்ன? மேனகா கொஞ்சம் லேட் பண்ணால் என்ன? டெலிபோன் ஒலித்தால் என்ன?
மேனகா சற்றே பயத்துடன் சைக்கிளில் இருந்து இறங்கினாள்.
அவள் பேன்ட்டும் பட்டனில் அலட்சியமாக இருந்த சட்டையும் ராஜலட்சுமியின் கோபத்தை இன்னும் அதிகரித்தன.

"எப்பம்மா வந்தே?"
"போன் அடிக்கிறது... கதவைத் திற" என அதட்டினாள்.
மேனகா, "ஈஸி மம்மி!"
"சரி போடீ... கதவைத் திற முதல்ல... அப்புறம் பெரியவாளுக்கு உபதேசம் பண்ணு."
"லுக் அட் திஸ்! நான் என்ன உபதேசம் பண்ணேன்?"
கதவைத் திறந்து, போனை நோக்கி ஓடி அதை எடுப்பதற்கு முன் போன் அடிப்பது நின்றுபோனது.
"சே..." என்று சோபாவில் விழுந்தாள்.
"ரிலாக்ஸ் மம்மி! முதல்ல ஈரப் புடைவையை மாத்தலாமா?" என்றாள்.

அத்தனை கோபத் திலும் மேனுவின் அழகான சடையின் கருநாகம் போன்ற வளர்த்தி பயமுறுத்தியது. கல்யாணம் பண்ண வேண்டும். நல்ல கணவனாகப் பார்த்து... என் கணவனைப் போல் இல்லாமல்.
போன் மறுபடி ஒலிக்க, மேனு எடுத்தாள்.

"..............?"
"ராங் நம்பர்" என்றாள்.
எதிர் போன் மறுபடி ஏதோ கேட்க, மேனகா "ஆமாம்... நம்பர் கரெக்ட்தான். உங்களுக்கு யார் வேணும்?"
"............."

"மிஸஸ் ராமச்சந்திரன்னு யாரும் இல்லை இங்கே."
"இரு" என்று அவளிடம் இருந்து ராஜ லட்சுமி போனைப் பிடுங்கிக்கொள்ள...
"யாரும்மா மிஸஸ் ராமச்சந்திரன்?"
ராஜலட்சுமி போனை எடுக்கும்போது அவள் கரம் நடுங்கியது.
"ராமச்சந்திரன்கறது உங்கப்பா பேரு.

ஹலோ... யாரு?"
"மிஸஸ் ஏ.வி.ராமச்சந்திரன் வீடுங்களா அது? நம்பர் கொடுத்தாங்க" என்று கேட்டது. நடுத்தர வயதுப் பெண் குரல்.
"ஆமாம், நீங்க யாரு..?"
"நான் எம்.ஆர். ஆஸ்பிட்டல்லேருந்து மேட்ரன் பேசறேன்.'"
"என்ன விஷயம்?"

"உங்க ஹஸ்பண்ட் இங்கே அட்மிட் ஆகி, போன ஒரு வாரமா நினைவு இல்லாமப் படுத்திருக்காரு. அட்மிஷன் ரிஜிஸ்தர்ல அட்ரஸும் போன் நம்பரும் இருக்குது. சார்ஜஸ் யாரும் ஏதும் கட்டலே... அதுக்குத்தான்..."
"அவருக்கு என்ன?"

"த்ராம்பாஸிஸ். நினைவு இல்லாமக் கிடக்கிறார். கேட் ஸ்கேன் எடுக்கறதுக்கு எழுதியிருக்காரு டாக்டர். ஆனா, யாரும் பணம் கொடுக்காததனால..."

ராஜலட்சுமியையே மேனகா உற்றுப் பார்த்துக்கொண்டு இருக்க...

"அட்ரஸ் சொல்லுங்க."

"எம்.ஆர். ஆஸ்பத்திரி தெரியாதா... பூந்தமல்லி ஹைரோடுல ஈகா தியேட்டர் தாண்டினவுடனே திரும்பினீங்கன்னா..."

"ரூம் நம்பர் சொல்லுங்க."

"பதினாலுல படுத்திருக்கார். வரீங்களா? கேஷா கொண்டுவந்தா நல்லது."

"எத்தனை கொடுக்க வேண்டி இருக்கும்?"

"ஆயிரத்து எழுநூத்துச் சொச்சம் பாக்கி."

"சரி... வரேன்" என்றாள் ராஜலட்சுமி.

"யாரும்மா?"

"உங்கப்பாடீ."

"என்னவாம்?"

"ஆஸ்பத்திரியில பேச்சு மூச்சில்லாமப் படுத்திருக்காராம்."

"அதனால?"

"பணம் பாக்கியிருக்காம்... டிஸ்சார்ஜ் வாங்கிட்டு..."

"என்னம்மா பேத்தறே? அவன் யாரு... அவனைப் போய் நீ என்ன பார்க்கறது?"

"அவன்லாம் பேசாதேம்மா... என்ன இருந் தாலும் உன் அப்பா அவர்."

"நோ மம்மி, நோ... அந்தாளு உன்னைவிட்டு எத்தனை வருஷம் ஆச்சு?"

அப்போது மேனு மூன்று வயதுக் குழந்தை.

"அவன் மூஞ்சிகூடத் தெரியாதும்மா. உன்னைத் தனியா விட்டுட்டு... யாரவ... அவ பேர் என்னவோ சொன்னியே... யாரு அவ?"

"புனிதவல்லி."

ராஜலட்சுமி ஈரப் புடைவையை மாற்றிக் கொண்டு, தலையை அவசரமாக வாரிக் கொண்டு, பர்ஸில் இருக்கும் பணத்தை எண்ணி செக் புத்தகத்தை எடுத்துக்கொண்டாள்.

"என்னம்மா, நான் சொல்லச் சொல்ல காது கேக்கலையா?"
"என்ன?"
"அங்கே போகப்போறியா?"
"ஆமாம். நீயும் வரே!"
"நோ வே! இந்த ஜென்மத்தில் நடக்காது."
"மேனு, அப்புறம் விதண்டாவாதம் பண்ண லாம். இப்போ என்கூட வந்தே ஆகணும். நீ வேணும்னா பாக்க வர வேண்டாம்."
"மம்மி, உனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கா?"

பவுடர் போட்டுக்கொண்டு நெற்றிப் பொட்டை விஸ்தாரம் பண்ணிக்கொண்டு, "பாரு, உன் அப்பா இல்லை, என் கணவன் இல்லேன்னாலும் ஒரு ஸ்ட்ரேஞ்சர்னு வெச்சுக்கலாமே..."
"மம்மி, யூ ஆர் அன்பிலீவபிள்! பாரத நாரி! என்ன, இப்படி ஒரு மதர் இண்டியா வேஷம் - பதினஞ்சு வருஷமா எட்டிப் பார்க்காத பன்னாடைக்கு."
"அதுக்கு முன்னாடி பதினஞ்சு வருஷம் பழகியிருக்கேனே!"
"இது பைத்தியக்காரத்தனம். நான் பரத்துக்கு போன் பண்ணிச் சொல்லப் போறேன்."
"எல்லாம் அப்புறம் வெச்சுக்கலாம். வரப் போறியா, நான் தனியா போகணுமா?"

ஆட்டோவில் போகும்போது மழை விடாமல் அவள் கால் ஓரத்துப் புடைவையை நனைத்தது. சின்ன பள்ளங்களில் எல்லாம் துள்ளித் துள்ளி அந்த ஆட்டோ செல்ல, மழை இரைச்சலின் இடையே மேனு புலம்பிக்கொண்டே வந்தாள்.

"இந்த மாதிரியும் ஒரு ஆள்... இந்த மாதிரியும் ஒரு மனைவி."

"பேசாம வா முதல்ல. அவரைப் போய்ப் பார்க்கலாம் என்ன ஸ்திதின்னு."
"அந்தாளு போயாச்சு. காலி கிளாஸ்."

எதற்காக அவரைப் பார்க்கப்போகிறேன். என்னைப் பாடுபடுத்தியதற்குப் பகவான் கொடுத்த தண்டனையைக் கண்கூடாக - ஊர்ஜிதமாகப் பார்ப்பதற்கா... இல்லை, இன்னா செய்தாரை நாணவைப்பதற்கா... ஏன்தான் இப்படிப் படபடப்பாகப் பதினைந்து வருஷம் காணாத கணவனை நோக்கிச் செல்கிறேன்?

'இந்த லெட்டர் யாரு எழுதியிருக்கா..?'
'படிச்சுப் பாத்தியே... கடைசியில என்ன எழுதியிருக்கு - புனிதவல்லின்னுதானே?'
'யாரு இந்தப் புனிதவல்லி?'
'யாராயிருந்தா உனக்கென்ன..?'
'ஃப்ரெண்டா?'
'இப்போதைக்கு அப்படித்தான்.'
'அப்புறம்?'
'கல்யாணம் பண்ணிக்க சான்ஸ் இருக்கு.'

'இப்படிக் கூசாம நேரா ஆணி அடிச்சாப்ல தாலி கட்டின பொண்டாட்டிகிட்ட சொல்றியே பிராமணா... இது நியாயமா? நான் என்ன குறைவெச்சேன் உங்களுக்கு?'
'ஒரு குறையும் இல்லை ராஜி.'
'பின்னே எதுக்கு இவ?'
'அதுவந்து ஒருவிதமான தேவை ஆயிடுத்து ராஜி. உனக்குச் சொன்னா புரியாது. உனக்கு எந்தவிதமான குறையும் இல்லாம...'
'உங்கப்பாவுக்குத் தந்தி கொடுத்து வரவழையுங்கோ.'
'வரவழைச்சா போச்சு. எனக்குப் பயமில்லை.'

'எனக்குப் புகலிடம் இல்லை... தைரியம் இல்லை... படிப்பு இல்லை... சாமர்த்தியம் இல்லை... ஒரு வேலை பாக்கத் தெம்பு இல்லேங்கறதாலதானே இப்படி அழிச்சாட்டியமா...'

'பீ ரீசனபிள். இதனால எந்தவிதத்துல நீ பாதிக்கப்படறே? உன்னண்ட குறை இருக்கணும்னு கட்டாயம் இல்லை. பல பேர் ரெண்டு பொண்டாட்டி கல்யாணம் பண்ணிண்டு சந்தோஷமா இருக்கா, தெரியுமோல்லியோ? பெருமாளே... சீதேவி பூதேவினு...'
'எனக்குச் சந்தோஷம் கிடையாது இதுல.'

'இப்போ யாரு கல்யாணம் பண்ணப் போறதா சொன்னா? ஒரு பேச்சுக்குத்தானே சொன்னேன். அசடு... போ, மூஞ்சி அலம்பிண்டு பிள்ளையார் கோயிலுக்குப் போயிட்டு வா...'
'தயவுபண்ணி எனக்குத் துரோகம் பண்ணிடாதீங்கோ. எனக்கு அப்பா, அம்மா யாரும் இல்லை. அண்ணா வீட்டுல எனக்கு வாழ்வு இல்லை. ஒண்டியா என்னால எதும் யாரையும் எதிர்க்க முடியாது. ப்ளீஸ்! என்னைக் கைவிட்டுடாதீங்கோ.'

'சே, அப்படி நடக்காது. எழுந்திரு. காலை விடு முதல்ல!'
மேனகா ரிசப்ஷனில் இருப்பதாகச் சொன்னாள். "எனக்கு யாரையும் பார்க்க வேண்டாம். சரியா அரை மணிதான் காத்திருப்பேன்" என்றாள்.
"எங்கேயும் போயிடாதே செல்லம். ப்ளீஸ், இன்னிக்கு மட்டும் அம்மாவுக்கு ஒத்தாசையா இரும்மா."
"அழாத போ."

14-ம் எண் அறையை மெள்ள அடைந்தாள் ராஜலட்சுமி. வெண்மை சக்கரத் திரை லேசாக ஃபேன் காற்றில் அசைந்துகொண்டு இருக்க, ட்ரிப் கொடுத்து மார்பு வரை போர்த்தி அந்த ஆசாமி படுத்திருந்தான். வாயில் குழாய் செருகியிருந்தது. அறையில் வேறு யாரும் இல்லை. ராஜலட்சுமி படுக்கையின் கால்மாட்டை அணுகினாள். கண்ணீர் இயல்பாக வடிந்தது. ராமச்சந்திரனின் முகத்தில் ஒரு வாரத்துக்கு உண்டான தாடி இருந்தது. ஊசிக்காகப் பொத்தல் பண்ண பல

இடங்களில் கரு ரத்தமாக இருந்தது. வாய் திறந்திருந்தது. மூச்சு மட்டும் கேட்டுக்கொண்டு இருக்க, கண்கள் மூடி இருந்தன.

'இந்த முகமா... இந்த முகமா... இதுவா நான் பிரிந்த கணவன்?'
'நீ சிவப்பா... நான் சிவப்பா... சொல்லு?'
'நீங்கதான். இதிலென்ன சந்தேகம்.'
'சின்ன வயசில் கடுக்கன் போட்டுண்டு காது தொள்ளைக் காதா போயிருக்கும் வைர கனம் தாங்காம. எங்கப்பா பாபநாசம் மைனர் பேரு ஆயிரம் வேலி நிலம் ஒழிச்சே கட்டினார்.'
"வந்துட்டீங்களா?" என்று குரல் கேட்கத் திரும்பினாள்.

ஒரு நர்ஸ் விரைவாக உள்ளே வந்தாள். அவள் கர்ப்பமாக இருந்தாள்.
"இவர்தான்... இவர்தான்..."
"அவங்க சம்சாரமா நீங்க?"
"ஆமாம்மா..."
"ராஜலட்சுமி உங்க பேரு."
நர்ஸ் சார்ட்டை எடுத்துக் கையை எடுத்து நாடி பிடித்து கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.
"இப்போ இவருக்கு எப்படி இருக்கு?"

"டாக்டர் சொல்வாரு. ஆமா, ஒரு வாரமா இந்த மாதிரி போட்டுட்டுப் போயிட்டீங்கன்னா எப்படிங்க யாருன்னு தெரியும்? கேட் ஸ்கேன் எடுக்கணும்னு நியூரோ என்.எஸ். அனத்தறாரு."
"இவருக்கு எப்படி இருக்கு?"
"அதான் பாக்கறீங்களே. பெட்சோர் வராமப் பாத்துக்கிட்டு இருக்கோம். அவ்ளோதான்."
"பேசறாரா?"
"மாரைச் சொறிஞ்சா எப்பவாவது முழிச்சுப் பாரு. அந்தம்மா யாரு... முதல்ல வந்தாங்களே?"

பதில் சொல்லவில்லை.

"பேசாம டிஸ்சார்ஜ் வாங்கிட்டு வீட்டுக்கு எடுத்துட்டுப் போயிருங்க. இங்கே ஒரு நாளைக்கு இருநூத்தம்பது ஆகுதில்லே!"
"ராமு சார்" என்று வலுக்கட்டாயமாக ராமச்சந்திரனை ஆட்டினாள் நர்ஸ்... திடுக்கிட்டு விழித்துக்கொண்டு பார்த்தான்.
"நான் வந்திருக்கேன்" என்றாள்.
"தலையணை மாத்திரலாமா?"

கண்கள் கலங்கியிருந்தன. எலும்பாக இருந்த கையைப் பிடித்தாள்.
"ராஜி வந்திருக்கேன்" என்றாள்.
கண்கள் அவளை அடையாளம் தேடினவா, கண்டுகொண்டனவா, கண்டுகொண்ட பின் துக்கப்பட்டனவா... ஏதும் தெரியாமல் மறுபடி கண் மூடிக்கொண்டான்.

"பேசுவாரா?"
"இல்லீங்க. பேச்சு, மூமென்ட் ஏதும் இல்லை. லம்பார் பங்க்சர் எடுத்தப்ப கட்டி கட்டியா ரத்தம்."
"ஆகாரம்..?"
"எல்லாம் டியூப் வழியாதான். என்.எஸ். வந்தா கேட்டுருங்க. டிஸ்சார்ஜ் பண்ணிட்டு, வீட்டுக்கு எடுத்துட்டு ஒரு நைட் நர்ஸைப் போட்டு வெச்சுக்கறதுதான் நல்லது."
"அவங்க யாரும் வரலையா..?"

"யாரு? வந்து அட்மிட் பண்ணதோட சரி. ஒரு சிவத்த ஆளு அந்தம்மாகூட வந்திருந்தாரு. என்னவோ அவங்களுக்குள்ளேயே பேசிக்கிட்டாங்க. 'அவளை வரச் சொல்லி ஒப்படைச்சுரு'னு திருப்பித் திருப்பி வாதாடிக்கிட்டு இருந்தாங்க. அவங்ககிட்ட கொஞ்சம் கடுமையாகூட இருக்க வேண்டியிருந்தது... பேரு என்னவோ சொன்னாங்களே? ராமு ராமுன்னு
கூப்பிட்டுக்கிட்டே இருந்தாங்க."
"புனிதவல்லி."
"ரெண்டு

சம்சாரமா? ராமு சார்... பெரிய ஆளு நீங்க" என்று ராமச்சந்திரனின் கன்னத்தை லேசாக நர்ஸ் தட்ட... அதற்கேற்ப தலை ஆடியது.

"நீங்க மூத்தவங்களா?"
"ஆமாம்."
"எத்தனை நாளா இப்படி?"
ராஜலட்சுமி சட்டென்று முகத்தை மூடி விசும்பி விசும்பி அழுதாள்.
"என்.எஸ். வர்ற நேரம். அழுவாதீங்க. கோவிப்பாரு."
கண்களைத் துடைத்துக்கொண்டு "கீழே என் பெண் மேனகானு பேரு... வரச் சொல்றீங்களா?"

"வார்டு பாய்கிட்ட தகவல் சொல்லி அனுப்பறேன். டிஸ்சார்ஜ் வாங்கிட்டுப் போயிருங்க... செலவு குறையும். எனக்கு என்னவோ அதிக நம்பிக்கையா தெரியலீங்க. நெறைய ரெஸ்ட் எடுத்தா செலப்ப சரியாகும். பிரெட் எதாவது வேணுமா, சொல்லுங்க."
"இதுதானா எங்கப்பா?"
திடுக்கிட்டுத் திரும்ப, மேனகா நின்று கொண்டு இருந்தாள்.

"இதானா அந்தாளு?"
"சத்தம் போடாதீங்கம்மா... மற்ற ரூம்கள்ல பேஷண்டுங்க இருக்காங்க இல்லை? பாப்பா, நீ இவரு மகளா?"
"அப்டின்னு சொல்லித்தான் தெரியும். மம்மி, பாத்தாச்சில்ல. போக வேண்டியதுதானே? அப்புறம் ஆட்டோ, பஸ் எதும் கெடைக்காது."
"இரு மேனு. டாக்டர் வரப்போறாராம். அவரைப் பாத்து..."
"அவரைப் பாத்து..?"

"என்ன விஷயம்னு கேக்கணும். யாராவது பொறுப்பேத்துக்கணும்ல?"
"மம்மி, இதில் நாம தலையைக் கொடுக்கறது நல்லதில்லை. நான் கீழே ஆபீஸ்ல விசாரிச்சேன். முதல் மூணு நாளைக்கு பேமெண்ட் பண்ணி இருக்கா. அதுக்கப்புறம் யாரும் வரலை. பாக்கி மட்டும் ஆயிரத்தெழுநூறு ரூபா இருக்கு. அதைக் கொடுத்தாத்தான் டிஸ்சார்ஜ் பண்ணுவா."

"பணம் பெரிசில்லை மேனு..."
"அந்தப் பொம்பளை வந்திருந்தாங்களா அம்மா?"
"சொன்னேனே... முத நாள் மட்டும் வந்து ரெண்டு பேத்துக்குள்ள ஏதோ வாக்குவாதம் பண்ணிக்கிட்டாங்க. அதுக்கப்புறம் யாரும் வரலை."
"அவங்க அட்ரஸ் இருக்குமா?" என்று மேனகா கேட்டாள்.

"ரிஜிஸ்தர்ல இல்லை."
"ரிஜிஸ்தர்ல நம்ம அட்ரஸ், போன் நம்பர்லாம் கரெக்டா அவா யாரோ கொடுத்திருக்காம்மா.. ரொம்ப க்ளவரா பண்ணியிருக்கா. எனக்கு அந்தப் புனிதவல்லி எங்கே தங்கறானு தெரிஞ்சாகணும்."
"மயிலாப்பூர்ல எங்கயோ... அதுக்கென்ன இப்போ?"
"அதுக்கென்னன்னா? இந்தாளை டிஸ்சார்ஜ் பண்ணிக் குண்டுக்கட்டா அவ வீட்டு வாசல்ல கொண்டுவெச்சுட்டு வர வேண்டாமாம்மா."
"என்ன மேனு?"

"ஆமாம்மா. சரியா கேட்டுக்கோ. இவனை வீட்டுக்குகீட்டுக்கு அழைச்சுண்டு வர்றதா ஏதாவது யோசனை இருந்தா கைவிட்டுரு முதல்ல. இப்படித் திருட்டுத்தனமா நம்ம விலாசத்தைக் கொடுத்துட்டு அவா பொறுப்புல இருந்து கழட்டிக்க முடியாது. திஸ் இஸ் ஜஸ்ட் நாட் ஆன்."
"மேனு, இந்தச் சமயத்துல இதெல்லாம் பத்தி ஆர்க்யூ பண்ண வேண்டாம்னு தோணறது."

"பேச்சே கிடையாது சிஸ்டர்... இந்தாளு எங்கம்மாவை எப்படி ட்ரீட் பண்ணியிருக்கார் தெரியுமா... என் அண்ணா பரத் சொல்லி இருக்கான். அப்போ நான் கைக் குழந்தை. மழையில நிஜமாவே தமிழ் சினிமாவுல வர்ற மாதிரி வாசல்ல தள்ளிக் கதவைச் சாத்தி இருக்காரு. ஒரு மெடிக்கல் ஷாப்புல ராத்திரி மழை நிக்கற வரைக்கும் காத்திருந்தோம். ராத்திரி சாப்பாடே இல்லை. இவங்க அண்ணா வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டியிருக்காங்க. அவங்க சம்சாரம் பால்கனியில இருந்தே

திருப்பி அனுப்பியிருக்காங்க. இதெல்லாம் இமாஜின் பண்ணிப் பார்க்க முடியாது உங்களால. வாங்க மம்மி, போகலாம்."

"அப்படியா... ராமு சார், அப்பேர்ப்பட்ட ஆளா நீ?" என்று படுத்திருந்தவன் கன்னத்தை நர்ஸ் தட்டுவதற்கேற்ப, தலை மறுபடி ஆடியது.

"எந்த நியாயத்தின் பேர்ல இவரை நாங்க உள்ளே சேர்த்துக்க முடியும். சொல்லுங்க."

"நர்ஸ், இப்போ இந்தாளு இதுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய நிலையில் இலை. ஒரு மூட்டை மாதிரிதான் ஃப்ளாட்ஃபாரத்தில் விட்டாலும் படுத்திருப்பார். அப்படியே இருப்பார்."

"காது கேக்குமா?" - மேனகா சார்ட்டைப் பார்த்தாள். கத்தையாகக் காகிதங்களில் பத்து நாள் சரித்திரம் எழுதியிருந்தது. ஸெரிப்ரல் த்ராம்பாஸிஸ்... எம்பாலிஸம் என்றெல்லாம் எழுதியிருந்தது.

"இல்லை கேக்காது!" - நர்ஸ் திடீரென்று மௌனமாகி சைகை மூலம் பெரிய டாக்டர் வருவதைக் காட்டினாள்.

பெரிய டாக்டருக்கு அதிகம் வயசாகவில்லை. முப்பத்தைந்து இருக்கலாம்போல. வெள்ளை கோட்டின் பையருகே 'ஜி.ஆர்.கோபிநாத்' என்று எழுதியிருந்தது. "ஹலோ! அட்லாஸ்ட் ஸம் ஒன்... என்னம்மா... எல்லாரும் இந்தாளை த்ராட்ல வுட்டுட்டுப் போயிட்டீங்க?"

"இவங்க முதல் சம்சாரம் டாக்டர்."

"யாராயிருந்தாலும் தினப்படி யாராவது பொறுப்பேத்துக்கணும். அண்டர்ஸ்டாண்ட்? நீங்க டாட்டரா?"

மேனகா தலையசைத்தாள்.

"லுக் யங் லேடி. யுர் ஃபாதர் இஸ் ரியலி ஸிக். கன்ட்ரோல் பண்ணாத டயாப்படீஸ். ஹைப்பர் டென்ஷன், ஆர்ட்டிரியல் திக்கனிங் த்ராம்பாஸிஸ் ஆகி பிளட் க்ளாட் ஆகியிருக்கு. அஃபேஸியா இருக்கு. எல்லாம் சேர்ந்து ஒரு பக்கமே பாரலைஸ் ஆகியிருக்கு. நிறைய

க்ளாட்ஸ் இருக்கும்போல. அதைக் கரைக்கத்தான் தொடர்ந்து மருந்து கொடுத்துக்கிட்டு இருக்கமே... ஒரு ஸி.டி. ஸ்கேன் எடுக்கணும். எந்த அளவுக்கு டேமேஜ்னு தெரியணும்... யாரு பொறுப்புனு பார்த்தா, அட்மிட் பண்ணவங்க ஆளையே காணுங்கறாங்க... ரொம்ப விநோதம்!"

"நான் சொல்றேன் டாக்டர்."
"மேனு சும்மாரு, டாக்டர்! இவர் உயிருக்கு ஆபத்தா?"
"அப்படி இல்லை. பெட் சோர் இல்லாமப் பாத்துக்கிட்டு வேளா வேளைக்கு ஃபீட் பண்ணா, பத்து நாளில் சில ஃபேகல்ட்டிஸ் எல்லாம் திரும்பப் பெற சான்ஸ் இருக்கு. எழுந்து நடக்க முடியாட்டாலும் ரைட்ஹாண்ட் கன்ட்ரோல் வரும்னு நம்பிக்கை இருக்கு."

"டாக்டர், திஸ் பாஸ்டர்ட் ட்ரீட்டெட் மை மதர் லைக் ஷிட்" என்று ஆரம்பித்த மேனகாவைத் திரும்பி நிதானமாகப் பார்த்து, "லுக் இந்தாளு என்னைப் பொறுத்தவரையில் ஒரு பேஷன்ட். இவர் பர்சனல் லைஃப்ல எப்படி இருந்தார்னு எனக்கு அக்கறை இல்லை. கொலைகாரனா இருந்து பெயில்ல வந்திருந்தாலும் இதே ட்ரீட்மென்ட்தான் கொடுப்பேன். எனக்கு இவர் ஒரு பல்ஸ், ஒரு மூச்சு, ஒரு எக்ஸ்ரே, ஒரு ஸ்கேன் இமேஜ், ஒரு சின்ட்ரோம்... அவ்வளவுதான்."

"அந்த ஸ்கேன் என்னவோ சொன்னீங்களே... அது எடுக்க எத்தனை பணமாகும்?"
"ஆபீஸ்ல கேளுங்கோ, சொல்லுவா. நாளைக்கு எடுத்துரலாம். இவரை இன்னும் பத்து நாளாவது வெச்சுக்கிட்டா நினைவு வர சான்ஸ் இருக்கு. இப்பவே நிறைய இம்ப்ரூவ்மென்ட், மாரைப் பிறாண்டினா முழிச்சுப்பாரு. பாருங்க!"
டாக்டர், "ராமசந்திரன் வேக்-அப் ராமச்சந்திரன். வேக்-அப்... யாரு வந்திருக்கா பாருங்க, வேக்-அப்" என மூர்க்கத்தனமாக அசைத்தார்.

"பத்து நாள் கழிச்சு அவரால பேச முடியுமா?" என்றாள் மேனகா.

"பேச்சு வர்றதுக்குக் கொஞ்ச நாள் ஆகலாம்."
"சொல்றதைப் புரிஞ்சுப்பாரா?" ராமச்சந்திரன் கண் விழித்து விழிகள் உருண்டன.
"இப்பவே அரசல்புரசலா புரியும். என்ன ராமச்சந்திரன், இது யாரு, சொல்லுங்கோ... உங்க டாட்டர்."
"அவர் பதினஞ்சு வருஷமா பாத்ததில்லை டாக்டர்."
"அப்படியா... எங்கேயாவது அமெரிக்காவுல இருந்தாளா?"
"இல்லை. அசோக் நகர்ல" என்றாள் மேனகா.

இப்போது மேனகாவை உற்றுப் பார்த்த டாக்டர், "ஸாரி, பர்சனல் ட்ராஜடிபோல இருக்கு. சரியானப்புறம் இந்தாளை உலுக்கிரலாம். கவலைப்படாதீங்க" என்றார்.
நர்ஸ் அவர் போனதும், "இண்டியாலயே இவர்தாங்க பெரிய நியூரோ சர்ஜன். என்ன யங்கா இருக்கா பாருங்க." மேனகா அதைக் கவனிக்காமல் "மம்மி, போலாமா?"
"இல்லை... ராத்திரி நான் இங்கேயே இருக்கேன். நீ போய் எனக்கு மாற்றுப் புடைவையும் டாய்லெட் செட்டும் கொண்டுவந்துரு. கார்த்தால காலேஜுக்கு போன் பண்ணிச் சொல்லிடு. நாலு நாளைக்கு வர மாட்டானு."

அவள் சொல்வதில் கவனம் இல்லாமல் மேனகா தன் தாயையே ஆச்சர்யத்துடன் பார்த்துக்கொண்டிருந்து "திஸ் லேடி இஸ் அன்பிலீவபிள்" என்றாள்.
"சிஸ்டர், இந்தாள் சூட்டுத்தழும்பு இருக்குது எங்கம்மா புஜத்துல."
"மேனு, ஜாஸ்தி பேசாம போறியா இப்போ?"
மேனகா, படுத்திருந்த ராமச்சந்திரனைப் பார்த்து "பாருய்யா பாரதப் பண்பாடு... சட் யுர் ஆக் டிஸ்கஸ்டிங்!" விருட்டென்று புறப்பட்டுச் சென்றாள்.

போனதும் நர்ஸ் "இந்த வயசுல புரியாதுங்க" என்று தன் வயிற்றைத் தடவிக்கொண்டாள்.

தினம் காலை மேனகா ஆட்டோவில் அவிஷ்கார் ரெஸ்டாரென்ட்டில் இருந்து அம்மாவுக்குச் சாப்பாடும் மாற்று உடையும் கொண்டு கொடுத்துவிட்டுத்தான் காலேஜ் போவாள். மாலை திரும்ப வந்ததும் காபி, டிபன் வாங்கிக் கொடுப்பாள். தாய்க்கும் மகளுக்கும் அதிகம் பேச்சே இல்லை. ராஜலட்சுமிதான் "இன்னிக்கு முழிச்சு முழுசா என்னைப் பார்த்தார்" என்பாள். "அடையாளம் தெரிஞ்சாப்ல இருந்தது. கண்ணுல தண்ணி வந்தது!"

"மருந்தோட ரியாக்ஷனா இருக்கும் மம்மி, உன்னை ஒண்ணு கேக்கணும்."
"என்ன?"
"இவர் நிஜமா பிழைச்சு எழுந்து நட மாடறார்னு வெச்சுக்கோ... என்ன செய்யறதா உத்தேசம்?"
"என்ன செய்யறதுன்னா?"
"எங்கே தங்கப்போறார் எங்க அன்பான அப்பா? பரத்துக்கு எழுதினேன். அவனும் நம்பவே இல்லை".
"நம்மகூடத்தான்."
"நோ வே! நான் ஹாஸ்டல் போயிருவேன். ஐ ஜஸ்ட் கான்ட் ஸ்டாண்ட் திஸ் ரோக்."
"அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல பிழைச்சு எழுந்திருக்கட்டும்."
"அந்தப் புனிதவல்லிகிட்டே இருந்து தகவல் உண்டா?"
"இல்லை. அவா கைகழுவிட்டானு தோண்றது."

"சக்கையா உறிஞ்சுட்டு, இந்தாளை கொட்டை துப்பறாப்ல துப்பிட்டா. அதைப் பொறுக்கி வெச்சுண்டு இருக்கே மம்மி. நீ என்ன நிரூபிக்க விரும்பறே?"
"ஒண்ணும் இல்லை. மேனு, ஒண்ணுமே நிரூபிக்க நான் விரும்பலை."
"இவர் உன்னைப் படுத்தினது எல்லாம் மறந்துபோச்சா?"
"இல்லை."
"பின்னே எதுக்காக?"

"எதோ ஒரு அநாதைக்குச் செய்யறதா. ஒரு மனிதாபிமானமா வெச்சுக்கலாமே. அதோட பழைய பந்தம்னு ஒண்ணு. அது என்னவோ எங்க தலைமுறைல அழியாத பந்தம்னு தோன்றது."

"இன்க்ரெடிபிள் லேடி" என்று அவள் அருகில் வந்து கன்னத்தோடு ஒட்டித் தேய்த்து விட்டுச் சென்றாள் மேனகா.

டாக்டர் கோபிநாத் எதிர்பார்த்தபடி எட்டாம் நாள் ராமச்சந்திரனுக்கு முழு நினைவு வந்து வலது கையை அசைக்க முடிந்தது. கண்களில் அடையாளம் தெரிந்தது.

"என்னைத் தெரியறதா?" என்றாள் ராஜலட்சுமி.

கண்களில் நீர் வடியத் தலையை ஆட்டினான்.

"பேச மாட்டாரரோ?"

"பேச்சு வர்றதுக்கு இன்னும் மூணு, நாலு நாள் ஆகும்."

அப்போதுதான் உள்ளே வந்த மேனகாவைப் பார்த்து டாக்டர் புன்னகைத்து, "மேனகா, நான் சொன்ன வாக்கைக் காப்பாத்திட்டேன். உங்க அப்பாவுக்கு முழு நினைவு வந்துடுத்து. என்ன என்னவோ கேக்கணும்னியே. என்ன வேண்ணா கேட்டுக்க. தி மான் இஸ் ல்யுஸிட் நௌ."

"சிஸ்டர் இன்னிக்கு வார்டு பாயை ஷேவ் பண்ணிவிடச் சொல்லுங்க."

மேனகா தன் தகப்பனைக் கண்கொட்டாமல் பார்த்தாள்.

"பேசறாரா?"

"இல்லை, புரிஞ்சுக்கறார். இவ யாரு தெரியறதா?" கலங்கிய கண்கள் அவளை ஏறிட்டுப் பார்த்து அடையாளம் தேடின.

"இவ மேனகா! அப்போ மூணு வயசு. உங்க பொண்ணு மேனகா... மேனகா."

ராமச்சந்திரனின் கண்கள் தன் மகளை மெதுவாக மெதுவாக நிரடின.

மேனகா படுக்கை அருகே வந்து மிக அருகில் நின்றாள்.

"சொன்னியாம்மா? எட்டு நாளா நீ இவருக்கு மூத்திரம், பீ வாரினதையெல்லாம் சொன்னியாம்மா? உன்னை நடுத் தெருவில்

துரத்திவிட்டதுக்கு எப்படி எங்களை எல்லாம் வளர்த்தே? சொன்னியாம்மா, எப்படி ஆளாக்கினே, எப்படி நீ வேலைக்குப் போய்ச் சேர்ந்து,
எங்களைப் படிக்கவெச்சே... சொல்லும்மா! உறைக்கட்டும் சொல்லு."
"மேனு, அதெல்லாம் வேண்டாம்."

ராமச்சந்திரனின் கை மெதுவாக அசைந்து உயர்ந்து, மேனகாவின் கையில் வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தைக் காட்டியது.
"என்ன சொல்றார்?"
"நோட்டு வேணுங்கறார்."
"பேப்பர் வேணுங்கறார்போல இருக்கு."
"ஏதாவது எழுதணுமா?"
ராமச்சந்திரன் தலையை அசைக்க, மேனகாவிடம் இருந்து பேனாவையும் காகிதத்தையும் வாங்கி அவன் மடியில் ராஜலட்சுமி வைத்தாள். ராமச்சந்திரனின் விரல் இடுக்கில் பேனா வைக்க, அவன் மெள்ள எழுதினான்...
'புனிதவல்லி எங்கே?'

திரைப்படமாக்கப்பட்ட இவரின் கதைகள்

- அனிதா இளம் மனைவி (இது எப்படி இருக்கு - திரைப்படம்)
- காயத்ரி
- கரையெல்லாம் செண்பகப்பூ
- ப்ரியா
- விக்ரம்
- வானம் வசப்படும்
- ஆனந்த தாண்டவம்
- சைத்தான்(திரைப்படம்)

பணியாற்றிய திரைப்படங்கள்

https://letterboxd.com/writer/sujatha-rangarajan/

- ரோஜா
- இந்தியன்

- ஆய்த எழுத்து
- அந்நியன்
- பாய்ஸ்
- முதல்வன்
- கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
- ஜீன்ஸ்
- உயிரே
- விசில்
- கன்னத்தில் முத்தமிட்டால்
- சிவாஜி த பாஸ்
- எந்திரன்
- வரலாறு
- செல்லமே

Videos

01] எழுத்துலகின் ஜாம்பவான் சுஜாதா

https://www.youtube.com/watch?v=STx6ar2ntUE [19:45]

02] **"வாழ்க்கையே வெறுத்துப்போச்சு"**- Writer Sujatha's Emotional Last Moments- Sujatha Wife Interview

https://www.youtube.com/watch?v=bPLwWon1Cwo [30:30]

இலக்கியவாழ்க்கை

சுஜாதா தன் தாத்தாவிடமிருந்து மரபிலக்கியத்தை அறிந்து கொண்டார். ஆழ்வார் பாசுரங்களை பாட்டியிடமிருந்து பயின்றார். இளமையில் ஸ்ரீரங்கத்தில் பின்னாளில் வாலி (கவிஞர்) என்னும் பெயரில் திரைக்கவிஞராக மாறிய ரங்கராஜனுடன் இணைந்து கையெழுத்து இதழ்கள் நடத்தினார். சுஜாதா திருச்சி ஜோசப் கல்லூரியில் படிக்கும்போது ஜோசப் சின்னப்பா என்ற ஆங்கில விரிவுரையாளர் பிரிட்டிஷ் சிறுகதைகளையும் கவிதைகளையும் அறிமுகம் செய்தார். ஐயம்பெருமாள் கோனார் (புகழ்பெற்ற கோனார் உரைகளை எழுதியவர்) என்னும் தமிழாசிரியர் சுஜாதாவுக்கு மரபிலக்கிய அறிமுகம் செய்து வைத்தார்.


சுஜாதா எஸ்.ரங்கராஜன் என்ற பெயரில் எழுதிய முதல் கதை 'எழுத்தில் ஹிம்சை' 1953-ல் திருச்சியில் இருந்து திருலோக சீதாராம் நடத்திவந்த சிவாஜி என்ற சிற்றிதழில் வெளியாகியது. கு.ப. ராஜகோபாலன் போன்றவர்கள் எழுதிக் கொண்டிருந்த இதழ் அது.

சுஜாதா டெல்லிக்குச் சென்றபோது அங்கே கணையாழி ஆசிரியராக இருந்த கே.கஸ்தூரிரங்கன், என்.எஸ்.ஜெகன்னாதன், இந்திரா பார்த்தசாரதி ஆகியோருடன் நட்பு உருவானது. கஸ்தூரிரங்கனால் ஜூலை 1965-ல் ஆரம்பிக்கப்பட்ட கணையாழி இதழில் ஆகஸ்ட் இதழ் முதல் 'ஸ்ரீரங்கம் எஸ்.ஆர்' என்ற பெயரில் கடைசிப் பக்கத்தில் எழுத ஆரம்பித்தார். நீர்க்குமிழிகள், பெட்டி, கடைசிப் பக்கம் என்று பல்வேறு தலைப்புகளில் எழுதி 'கடைசிப் பக்கம்' என்ற பெயர் நிலைத்தது. இந்தக் கட்டுரைகள் விசா பதிப்பகத்தால் தொகுக்கப்பட்டுள்ளன.

சுஜாதா தன் நண்பர் ஸ்ரீனிவாசன் என்பவர் எழுதிய 'சுஷ்மா எங்கே?' என்ற ஒரு கதையை திருத்திக் கொடுக்க அது குமுதம் இதழில் வெளியிடப்பட்டதைக் கண்டு தானும் எழுதலாம் என்னும் எண்ணத்தை அடைந்ததாக சொல்லியிருக்கிறார். சுஜாதா எழுதிய முதல் படைப்பான 'இடது ஓரத்தில்' என்ற சிறுகதை 1962-ல் குமுதத்தில் எஸ்.ரங்கராஜன் என்ற பெயரில் வெளியாகியது.



சுஜாதா, கமல்ஹாசன்



சுஜாதா

சுஜாதா நகுலன் தொகுத்த குருக்ஷேத்திரம் என்னும் தொகைநூலில் தனிமைகொண்டு என்னும் சிறுகதையை எழுதினார். தமிழின் நல்ல சிறுகதைகளில் ஒன்றாக அது கருதப்படுகிறது. அதே கதையை விரிவாக்கி நைலான் கயிறு என்ற பெயரில் 1968 ஆகஸ்ட் மாதம் முதல் குமுதத்தில் தொடர்கதையாக எழுதினார். முதலில் சீட்டுமாளிகை என்று அதற்கு பெயரிடப்பட்டது. பின்னர் நைலான் கயிறு என மாற்றப்பட்டது. அந்நாவல் எழுதுவதற்கு சுஜாதா என புனைப்பெயர் சூட்டிக் கொண்டார். அப்போது ரா.கி.ரங்கராஜன் குமுதத்தில் எழுதிக் கொண்டிருந்தார். பெயர்குழப்பம் வரக்கூடாது என்பதனால் அப்பெயரைச் சூட்டிக்கொண்டதாக ஓரிடத்திலும், ரங்கராஜன் என்றபெயரில் உள்ள பழமைநெடி பிடிக்காமல் சுஜாதா என்ற நவீன பெயரை சூட்டிக்கொண்டதாக இன்னொரு இடத்திலும் சுஜாதா சொல்லியிருக்கிறார். ஆனால் மைய அரசின் பாதுகாப்புத்துறை சார்ந்த தொழில்நுட்பப் பணியில் அப்போது இருந்தமையால் பணிநடத்தைச் சட்டப்படி வெளியே எழுதலாகாது என்பதனால்தான் சுஜாதா அந்தப் புனைப்பெயரைச் சூட்டிக் கொண்டார்.

கணேஷ்-வசந்த்

சுஜாதாவின் நடையும், துப்பறியும் கதைகளில் அவர் உருவாக்கிய யதார்த்தமும் பெரும்புகழ் பெற்றன. அவருடைய புகழ்பெற்ற துப்பறியும் கதாபாத்திரங்கள் வழக்கறிஞர் கணேஷ், அவர் உதவியாளர் வசந்த். கணேஷ் அவருடைய முதல் தொடர்கதையான நைலான்

கயிறு கதையில் 1968-ல்அறிமுகமானார். வசந்த் பின்னர் ப்ரியா என்னும் நாவலில் 1973-ல் அறிமுகமானார் (பார்க்க கணேஷ்,வசந்த்).

சிறுகதைகள்

சுஜாதா மத்யமர், ஸ்ரீரங்கத்து தேவதைகள், தூண்டில்கதைகள் என்னும் பொதுத்தலைப்புகளில் சிறுகதைகள் எழுதியிருக்கிறார்.

அறிவியல்

சுஜாதா அறிவியல் சிறுகதைகளை தமிழுக்கு அறிமுகம் செய்த முன்னோடி எழுத்தாளர். அவை தனித்தொகுதியாக வெளியாகியிருக்கின்றன. அறிவியல் கூறுகளைக்கொண்டு திகைப்பூட்டும் மர்மக்கதைகளை எழுதுவதே சுஜாதாவின் பாணி. சுஜாதா எழுதிய அறிவியல் குறிப்புகளும், கேள்வி-பதில்களும் தமிழில் பொதுவாசகரிடையே அறிவியலைப் பரப்ப பெரும் பங்களிப்பாற்றியவை. சுஜாதாவின் "ஏன், எதற்கு, எப்படி" என்னும் தொடர் தமிழில் புகழ்பெற்ற அறிவியல் விளக்க பத்தி. சுஜாதா தொழில்நுட்பத்தின் ஆக்கசக்தி மேல் நம்பிக்கை கொண்ட, நிரூபணவாதப் பார்வை கொண்ட அறிவியலாளராக அவற்றில் வெளிப்படுகிறார்.

நாடகங்கள்

சுஜாதா ஆர்தர் மில்லர், டென்னஸி வில்லியம்ஸ் போன்ற அமெரிக்க யதார்த்தவாத நாடக ஆசிரியர்களால் பாதிக்கப்பட்டவர். சுஜாதா எழுதிய டாக்டர் நரேந்திரனின் வினோத வழக்கு, சிங்கமையங்கார் பேரன் போன்ற நாடகங்கள் மிகையற்ற அன்றாடச் சித்தரிப்பு மற்றும் இயல்பான உரையாடல் வழியாக இலக்கியத்தன்மையை அடைந்தவை.

மரபிலக்கியம்

சுஜாதா திருக்குறள், சங்கப்பாடல்கள் ஆகியவற்றை சமகாலத் தமிழில் எளியமுறையில் விளக்கும் நூல்களை எழுதினார். ஆழ்வார்

பாடல்களுக்கு அவர் எழுதிய விளக்கக் குறிப்புகள் குறிப்பிடத்தக்கவை.

நடை

சுஜாதாவின் நடை தமிழில் பாரதி, புதுமைப்பித்தன் ஆகியோருக்கு பின் மிகுந்த செல்வாக்கைச் செலுத்திய நடை என மதிப்பிடப்படுகிறது. சுஜாதா பொதுவாசகர்களுக்கான எழுத்தில் அந்நடையை கையாண்டாலும்கூட அது தீவிர இலக்கியத்தளத்தில் எழுதுபவர்களிலும் பலரிடம் செல்வாக்கைச் செலுத்தியது. சுஜாதாவின் நடையின் இயல்புகள் மூன்று.

- ***புறவயத்தன்மை.*** **சுஜாதா புறவுலகை நுணுக்கமாகச் சித்தரிப்பதிலும், கதைநிகழ்வுகளை முழுக்கமுழுக்க புறவயமாகச் சித்தரிப்பதிலும் கவனம் குவித்தவர்.**
- ***சொற்சிக்கனம்.*** **சுஜாதா மிகக்குறைவான சொற்களில் ஒரு காட்சியை அல்லது நிகழ்வைச் சொல்லமுயன்றபடி இருந்தவர்.**
- ***விளையாட்டுத்தனம்.*** **சுஜாதாவின் நடையில் எப்போதும் ஆசிரியர் விளையாட்டுத்தனத்துடன் வெளிப்பட்டபடியே இருந்தார். பகடி, எள்ளல் என அவருடைய மொழி அமைந்திருந்தது.**

சுஜாதாவின் நடையில் செல்வாக்கு செலுத்திய தமிழ் முன்னோடிகள் புதுமைப்பித்தனும் அசோகமித்திரனும். ஆங்கில முன்னோடிகள் என எர்னஸ்ட் ஹெமிங்வே, ஜான் அப்டைக், ஆகிய இலக்கிய எழுத்தாளர்களையும் ஃப்ரெடெரிக் போர்ஸித் போன்ற ஆங்கில பரபரப்பு எழுத்தாளர்களையும் குறிப்பிடலாம். சுஜாதா ஜான் அப்டைக் எழுத்தில் பயன்படுத்திய எழுத்துக்களை கீழ்மேலாக அடுக்கும் உத்தி, அமைதியை குறிக்க ஏராளமான புள்ளிகளை போடும் உத்தி போன்றவற்றை தானும் பயன்படுத்தினார். பெயர்ச்சொற்களை வினைச்சொற்களாக திரித்துக்கொள்வது போன்றவையும் ஜான் அப்டைக் பயன்படுத்திய உத்திகளே. ஹெமிங்வேயின் நடையில் உள்ள சுருக்கமான புறவிவரிப்பு, அதற்கு வழக்கத்துக்கு மாறான உவமைகளை விமானவியல் போன்ற துறைகளில் இருந்து எடுத்துக் கொள்வது (கோபால்ட் நீல வானம்) ஆகியவற்றை தானும் கடைபிடித்தார். கர்ட் வேன்கார்ட் நடையில் மொழியை சற்று திரிப்பதன் வழியாக உருவாக்கப்படும் நுண்ணிய பகடியையும் சுஜாதா

பின்பற்றினார். ஆங்கில பரபரப்பு நாவல்களிலுள்ள விரைவான நிகழ்வு விவரிப்புகளும் சுஜாதாவால் எடுத்தாளப்பட்டன.


சுஜாதாவின் நடை உத்தி என்பதற்கு அப்பால் சென்றது அவருடைய விரிவான வாசிப்பு மற்றும் கூரிய கவனிப்பினால் செறிவூட்டப்பட்டமையால்தான். சங்க இலக்கியம், ஆழ்வார் பாடல்கள், சட்டம், வணிகம் ஆகியவற்றில் புழங்கும் தனிமொழிகள், சென்னையிலும் திருச்சியிலும் உள்ள பேச்சுமொழிகள், நவீன இலக்கியத்தின் குறிச்சொற்கள் என எல்லாவகை மொழிவெளிப்பாடுகளையும் கூர்ந்து கவனித்து அவற்றிலிருந்து சொல்லாட்சிகளை எடுத்து தனக்காக மாற்றியமைத்துக் கொண்டே இருந்தார். பல்துறை குறிப்புகளால்தான் அவருடைய நடை கூர்ந்த வாசிப்புக்குரியதாகியது. அவர் அடுத்தகட்ட படைப்பாளிகளில் ஆழ்ந்த செல்வாக்கை உருவாக்கக் காரணம் அந்த விரிவான குறிப்புத்தன்மைதான்.

https://kirukkal.com/2007/04/28/writer-sujatha-short-biography/

https://chummaaorublog.wordpress.com/2010/02/27/sujatha-an-immortal-writer/

இலக்கிய இடம்

https://www.commonfolks.in/books/d/sujatha-india-ilakkiya-sirpigal



சுஜாதாவின் இலக்கிய இடம் முதன்மையாக அவருடைய நடை ஏற்படுத்திய செல்வாக்கினால் உருவாவது. தமிழிலக்கியச் சூழலில் அவருக்கு முன்னால் இருந்த நடைகள் இரண்டு வகை. பொதுவாசிப்புக்கான தளத்தில் கல்கி எழுதியதுபோல எளிமையாக நேரடியாக வாசகர்களிடம் பேசுவது போன்ற நடை ஒரு பக்கமும், சாண்டில்யன் எழுதியதுபோல ஆடம்பரமான, அணிகள் நிறைந்த நடை இன்னொரு பக்கமும் இருந்தன. நவீன இலக்கியச் சூழலில் அசோகமித்திரன் எழுதுவது போன்று உள்ளது உள்ளபடி சொல்லும் தன்மை கொண்ட யதார்த்தவாத நடையும்,

கூரிய பகடியும் விமர்சனமும் கொண்ட சுந்தர ராமசாமி பாணி நடையும் இருந்தன. சுஜாதாவின் நடை ஏராளமான புறக்குறிப்புகளை உள்ளிழுத்துக்கொண்டு பகடியும் விளையாட்டுமாகச் செல்லும் தன்மை கொண்டிருந்தது. முற்றிலும் புறவய உலகைச் சார்ந்து செயல்படுவதாக இருந்தது. அது நவீன வாழ்க்கையைச் சொல்ல உகந்ததாக இருந்தது.

சுஜாதாவின் பார்வை எண்பதுகளில் வாசிக்க வந்தவர்களுக்கு உவப்பானதாக இருந்தது. எழுபதுகளில் உலகளாவிய சூழலில் இருந்த அரசியல்தீவிரம் எண்பதுகளில் இல்லாமலாகியது. புதிய தலைமுறை அரசியலற்றதாகவும், தொழில்நுட்ப அறிவியல்மேல் நம்பிக்கை கொண்டதாகவும் இருந்தது. அரசியல்பார்வைக்குப் பதிலாக அறிவியல்பார்வையை ஏற்றுக்கொண்ட தலைமுறைக்கு அணுக்கமானவராக சுஜாதா இருந்தார்.

சுஜாதாவின் அறிவியல் சிறுகதைகள் தமிழில் முன்னோடியானவை. அவை தொழில்நுட்பத்தை மர்மக்கதைகளில் பயன்படுத்துவதனால் அறிவியல்தன்மை கொண்டவையே ஒழிய உலகின் சிறந்த அறிவியல்புனைவுகளைப்போல அறிவியல்கொள்கைகளை ஒட்டி புனைவுகளை உருவாக்குபவையோ, வாழ்க்கையின் வினாக்களுக்குள் செல்ல அறிவியலில் இருந்து படிமங்களைப் பெற்றுக்கொள்பவையோ அல்ல. ஆனால் அவை அறிவியல்புனைவை தமிழில் தொடங்கி வைத்தவை.

சுஜாதாவின் சிறுகதைகளில் நடுத்தரவர்க்க வாழ்க்கையை இயல்பாகச் சொல்லும் கதைகள் இலக்கியத்தன்மை கொண்டவை, அவருடைய நாடகங்களும் யதார்த்தவாத அழகியல் கொண்ட இலக்கியப்படைப்புகள் என்று ஜெயமோகன் குறிப்பிடுகிறார்.

https://www.sirukathaigal.com/tag/%e0%ae%9a%e0%af%81%e0%ae%9c%e0%ae%be%e0%ae%a4%e0%ae%be/

இந்து தமிழ் திசை

ஸ்ரீரங்கத்துத் தேவதைகளின் நாயகன்

https://www.hindutamil.in/news/literature/3972-.html

சுஜாதா இறந்த பின் சென்னையில் நடந்த அஞ்சலி நிகழ்ச்சியில் இலக்கியவாதிகள் பலரும் திரைத்துறைப் பிரபலங்களும் கலந்துகொண்டனர். சுஜாதாவின் எழுத்தைப் பற்றி கு. ஞானசம்பந்தன்

போன்றோர் பேசியபோது அரங்கத்தில் கைத்தட்டலும் விசிலும் பறந்தன. அதன் பின்னர் வைரமுத்து பேசியபோது சொன்னார்: "அஞ்சலி நிகழ்ச்சியில் கைதட்டக் கூடாது என்பது மரபு. விசில் அடிக்கக் கூடாது என்பது மரபு. பல மரபுகளை உடைத்த எழுத்தாளனின் அஞ்சலி நிகழ்ச்சியில், அவற்றைச் செய்வதைவிட வேறு பெரிய அஞ்சலி என்னவாக இருக்க முடியும்?" மரபின் ஆழத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு, பின் அதனை உடைத்தவர்தான் சுஜாதா.



அவரது கதைமாந்தர்கள் பல தரப்பட்டவர்கள். பெரும்பாலும் சாதாரண நடுத்தர வர்க்கத்தினர்; சுஜாதாவின் பார்வையில் அவர்கள் 'ஏறக்குறைய நல்லவர்கள்; பெரும்பாலும் கோழைகள். பணக்கார சௌகரியங்களுக்குத் தொட்டும் தொடாத இடத்தில் இருப்பவர்கள். பக்தி, காதல், பரிவு, பாசம், தியாகம், நேர்மை போன்ற குணங்களைத் தேவைக்கும் அவசரத்துக்கும் ஏற்பச் சற்று மாற்றிக்கொள்பவர்கள். சமூகம் வாசல் கதவைத் தட்டுவதைக் கேட்காதவர்கள்'. ஸ்ரீரங்கத்து தேவதைகளில் வருபவர்கள் ஏழைப் பிராமணர்களும், இவரது இள வயது சிநேகிதர்களும், பாட்டிகளும் மாமாக்களும். அதிபுத்திசாலிகளும், நான் இந்த உலகத்தைச் சார்ந்தவனே அல்ல என்ற இறுமாப்புள்ள மேதாவிகளும், சாதாரண நடுத்தர வர்க்கத்தை ஒரு அற்பத்தனத்தோடு பார்ப்பவர்களும் இவரது கதைகளில்

உலாவுவதுண்டு. இவரது கதை உலகத்தில் ஆண்களிடம் எளிதில் ஏமாறும் வெகுளிப் பெண்களும் உண்டு; புத்திசாலி ஆணவப் பெண்களும் உண்டு.

அவரது நகைச்சுவையின் அம்சங்கள் என்ன என்று அவரது பாணியில் 'குடலாப்பரேஷன்' செய்து பார்த்தால் சாதாரண விஷயத்தைச் சற்றே மிகையாகச் சொல்வதும், தன்னைத் தானே கேலி செய்துகொள்வதும், புத்திசாலித்தனமான வார்த்தைகளும் என்று கூறலாம். ("டிவியிலிருந்து பேட்டிக்கு அழைத்தார்கள். டிவி என்றால் பொம்மை தெரியுமே என்ற அல்ப ஆசையுடன் சரி என்றேன்" – சுஜாதா)

ஒரு சில சொற்றொடர்களை அவர் அடிக்கடி பயன்படுத்துவார். 'பசித்த புலி தின்னட்டும்', 'ஜல்லி அடிப்பது', 'பகலில் பசு மாடு தெரியாது', 'கால் இஞ்ச் கருணை', 'கடிகார மூளை', 'கெட்ட காரியம்' போன்றவை உடனே நினைவுக்கு வருகின்றன. 'அவள் புன்னகை மட்டும் அணிந்திருந்தாள்' என்று எழுதும்போது அதில் புத்திசாலித்தனமும் குறும்புத்தனமும் ஒருசேர மிளிரும். அதுதான் சுஜாதா.

ஒரே மாதிரியான எழுத்து என்ற வலையிலிருந்து தப்பித்தவர் சுஜாதா. துப்பறியும் கதைகள், அறிவியல் கதைகள், வரலாற்றுக் கதைகள், சமூகக் கதைகள், குழப்பக் கதைகள் (!) என்று எதையும் அவர் விட்டுவைக்கவில்லை. புனைகதைகளைத் தவிர்த்து பல நல்ல கவிதைகளையும் கவிஞர்களையும் வாசகர் வட்டத்திற்கு அறிமுகப்படுத்தியவர். ஹைக்கூக்களைப் பிரபலப்படுத்திய வர்களில் முக்கியமானவர்.

தனது எழுத்து தீவிர இலக்கியமாக மதிக்கப்படவில்லை என்கிற வருத்தமும் கோபமும் அவருக்கு இருந்தது. அவரிடம், தங்கள் எழுத்து இலக்கியமா என்று ஒரு பேட்டியில் கேட்டபோது 'சிலது இலக்கியம். சிலது இலக்கியமல்ல' என்று கூறினார்.

கணேஷ்-வசந்த் கதைகளையும் பல பொழுதுபோக்குக் கதைகளையும் எழுதிய அதே சுஜாதாதான் 'தனிமை கொண்டு', 'காணிக்கை', 'வீடு', 'நகரம்', 'ஒரு லட்சம் புத்தகங்கள்' போன்ற மிகச் சிறந்த

சிறுகதைகளையும் எழுதினார். 'கனவுத் தொழிற்சாலை', 'எப்போதும் பெண்' போன்ற நாவல்களையும் எழுதினார். தனித்து வைத்துத் தராசிலிட்டால் இந்த ஆக்கங்கள் இலக்கிய மதிப்பில் தாழ்ந்தவை அல்ல என்பது விளங்கும். நிறைய எழுதியதால் பல நல்ல கதைகள் கவனிக்கப்படாமல் போய்விட்ட அபாயமும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். 'ஹாஸ்டல் தினங்கள்', 'மண் மகன்' போன்றவை உதாரணங்கள். பெரும்பாலும் தொடர்கதைகள் எழுதியதால் அவற்றின் பத்திரிகை சார்ந்த கட்டாயங்களும் அவரது வீச்சைச் சற்றே தொய்வடையச் செய்துவிட்டன. இருந்தாலும் பல சிறுகதைகளில் இவரது இலக்கியத் தரம் மின்னும்.

'பார்வை' என்ற சிறுகதையில் கண் தெரியாத இளைஞரும் சுஜாதாவும் பேசுவதுபோல் ஒரு காட்சி வரும். அந்த இளைஞர் சுஜாதாவிடம் கூறுவார்: "உங்கள் கதைகளைப் படித்திருக்கிறேன். ஒரு சிலது சிறந்த கதைகள். சிலது குப்பை. யு ஆர் கேபபிள் ஆஃப் சம் குட் ரைட்டிங்" என்று.

ஒருவேளை இதுதான் சுஜாதாவைப் பற்றி சுஜாதாவின் நேர்மையான விமர்சனமோ?

சுஜாதா பற்றி பாலகுமாரன்

https://sujathadesikan.blogspot.com/2008/03/blog-post_6930.html

சில நினைவுகள் இருக்கின்றன. அவர் மறைவு செய்தியைக் கேட்ட பின் உள்ளுக்குள்ளே அவை மெல்ல சோகத்தோடு மலர்ந்தன.

அப்பொழுது தமிழில் கவிதையில் இருக்கும் அளவுக்கு கதையில் எனக்கு ஆளுமை இல்லை. இப்பொழுது சோழா ஷெரட்டன் ஹோட்டல் இருக்குமிடத்தில் முன்பு ஒரு திருமண மண்டபம் இருந்தது. அந்த திருமண மண்டபத்தில் தினமணி கதிர் பத்திரிக்கையின் சார்பாக, அதன் ஆசிரியராக இருந்த திரு. சாவி

அவர்கள் எழுத்தாளர் சுஜாதாவை சென்னை மக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

மண்டபம் முழுக்க அடர்த்தியான கூட்டம். புதிய உரைநடை எழுதுபவர்கள், புதுக் கவிஞர்கள், சிவப்பிலக்கிய எழுத்தாளர்கள், காதல் கதை எழுதுபவர்கள், துப்பறியும் கதை செய்பவர்கள் என்று பல தரப்பட்ட எழுத்தாளர்கள் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். எழுத்தாளர் திரு. மௌனி அவர்கள் வந்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பிக்கும் முன்பு எழுத்தாளர் திரு. மௌனியிடம் திரு.சுஜாதா போய் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். திரு. மௌனி அவர்கள் நாங்கள் உங்கள் எழுத்தை படித்ததில்லை, உங்களை பற்றி இவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால் வந்தேன் என்று சொல்ல, சற்றும் தயங்காமல் நான் உங்கள் எழுத்தை படித்திருக்கிறேன். எனக்கு அது பேருதவி செய்திருக்கிறது என்று சிறிது கூட சலனமில்லாமல் உண்மையான பணிவோடு பதில் சொன்னார். தொட்டதெற்கெல்லாம் சீறி விழும் எங்களை போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு அந்த பணிவு ஆச்சரியமாக இருந்தது. அந்தக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டம் முடிந்த பின் நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். கவிதையில் உள்ள ஆளுமை போல சிறுகதையில் வரவில்லை. சிறுகதை சிந்திப்பது எப்படி என்று தெரியவில்லை என்று நான் கேட்க, இது ஒன்றும் கடினம் இல்லை. நான் சொல்லித் தருகிறேன் என்று சொல்லி ஒரு நேரம் குறிப்பிட்டார்.

நானும், அமரர் சுப்ரமணியராஜூவும் அவருடைய தமையனார் வீட்டிற்கு அருகே உள்ள இடத்தில் காத்திருந்தோம்। எழும்பூரில் டாக்டர் நாயர் பாலத்திற்கு போகும் முன்பு ஒரு சிறிய புல் திடல் இருந்தது। அந்த புல் திடலில் நின்றபடி வெகு நேரம் இலக்கியம் பேசினோம். மறுபடியும் சிறுகதை எழுதுவது எப்படி என்று கேள்வி கேட்க, முதல் வாக்கியத்திலேயே கதையை ஆரம்பித்து விட வேண்டும்.

"நான் ஜன்னலுக்கு அருகே நின்று கொண்டு தலை வாரிக் கொண்டிருந்தேன்! தெருவில் ஒருவன் நடந்து போய் கொண்டிருந்தான். அவனுக்கு தலையே இல்லை" .இது முதல் பேரா.

அடுத்த பேராவில் "அவன் தலையில் ஒரு பானையை கவிழத்து கொண்டு போய் கொண்டிருந்தான்!" என்று எழுது அல்லது "அவன் தலை வெட்டப்பட்டு விட்டது. முண்டம் மட்டும் நடந்து போய் சுருண்டு விழுந்தது" என்று எழுது. முதல் வகை நகைச்சுவை கதை. இரண்டாவது துப்பறியும் கதை. வேறு ஏதாவது விதமாகவும் கூட இதை எழுதலாம். ஆனால் முதல் பேராவில், முதல் வாக்கியத்தில் கதை ஆரம்பித்து விட வேண்டும்.

பொல பொலவென்று பொழுது விடிந்தது. “சார் போஸ்ட்” என்ற சத்தம் கேட்டது. நாளை விடிந்தால் தீபாவளி என்றெல்லாம் எழுதாதே என்று சொல்லிக் கொடுத்தார். என்ன சொல்லப் போகிறோம், எப்படி சொல்லப் போகிறோம் என்று யோசி என்று விவரித்துக் கொடுத்தார். எனக்கு அந்த சந்திப்பு மிக உபயோகமாக இருந்தது.

பிற்பாடு ஒரு கூட்டத்தில் அவர் இருந்த போது அவர் முன்னிலையில் “எனக்கு எழுத சொல்லிக் கொடுத்தது திரு. சுஜாதா அவர்களே” என்று நான் நன்றியோடு இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்த போது, அவர் மெல்ல எழுந்து வந்து என்னிடமிருந்து மைக் வாங்கி, “நான் ஒரு நூறு, நூற்றைம்பது பேருக்கு எழுத சொல்லிக் கொடுத்தேன். ஒரே ஒரு பாலகுமாரன் தான் புரிஞ்சிண்டான். கத்துக் கொடுக்கிறது ஒன்றும் பெரிய விஷயம் இல்ல. கத்துக்கறது தான் பெரிய விஷயம்” என்று சொன்னார். கூட்டம் கை தட்டி பெரிதாக ஆரவாரித்தது. கூட்டம் முடிந்த பிறகு எனக்கு சொல்லிக் கொடுங்கள். எனக்கு சொல்லிக் கொடுங்கள் என்று பல இளைஞர்கள் திரு. சுஜாதாவை சூழ்ந்து கொண்டார்கள். திரு. சுஜாதா பல பேருக்கு பலதும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

ஒரு கால கட்டத்து இளைஞர்களை வெகு அழகாக தமிழ் இலக்கியத்திற்கு இழுத்து வந்தார். கட்டுரையாயினும் சரி. கதையாயினும் சரி. படிக்க சுவாரசியமாக இருக்க வேண்டும் என்பதை

முக்கியமான கட்டளையாக ஏற்று எல்லா படைப்புகளையும் மிக நேர்த்தியாக நெய்து வந்தார்.

எழுத்தாளர் திரு/ சாவி அவர்களுடன் பெங்களூருக்கு ஒரு சுற்றுப்பயணம் போனோம்/ அதில் எழுத்தாளர் ராணி மைந்தன், சுப்ரமணியராஜூ, விசிட்டர் அனந்த், நான் என்று பலர் இருந்ததாக நினைவு/ நாங்கள் எல்லோரும் திரு. சுஜாதா வீட்டிற்கு ஒரு காபி குடிக்க போய் அவரோடு பேசி விட்டு வந்தோம். பல எழுத்தாளர்கள் ஒன்று கூடி ஒரு எழுத்தாளர் வீட்டிற்கு பத்திரிக்கையில் எழுதுவதற்காகப் போனதாய் சம்பவம் உண்டா. இது போல் முன் எப்போதும் நடந்ததில்லை. இனி நடக்குமா என்றும் தெரியவில்லை.

அவரிடம் எல்லோரையும் கவர்ந்திழுக்கும் ஒரு கனிவு இருந்தது. அந்தக் கனிவும், கவர்ச்சியும் அவர் எழுத்திலும் இருந்தது. சுஜாதாவின் மறைவு தமிழ் உரைநடைக்கு ஒரு மிகப் பெரிய இழப்பு. சுஜாதா ஸ்தூலமாக இல்லாது போனாலும் எவரெல்லாம் நல்ல தமிழ் இலக்கியம் படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ அவர்களுடைய நெஞ்சில், அவர்கள் ஆசையில் வழிகாட்டியாய் வாழ்ந்து கொண்டிருப்பார்.

(நன்றி: பாலகுமாரன்)

எழுபத்தொன்று <::> சுஜாதா

https://sujathadesikan.blogspot.com/2006/05/blog-post_04.html

அதிகாலையிலிருந்து போன்கால்கள், பொக்கேக்கள், பரிசுகள், ஏதோ நேற்றுப் பிறந்தவன்போல என்னை உணரவைக்கும் இந்தப் புதிய சங்கதிகளை என்னை விட என் எழுத்துக்கு நண்பர்கள் தரும் மரியாதையாக எண்ணி அதில் மமதை கொள்ளாமல் இருக்க முயற்சிக்கிறேன். பேரெழில் குமரன் ஒரு மிகப் பெரிய வாழ்த்து அட்டையில் என் போட்டோக்களை அமைத்து லாமினேட் பண்ணி அனுப்பியிருந்தார். குறைந்தபட்சம் அதைத் தயாரிக்க இரண்டு நாளாகியிருக்கும். அவர் என் பரம ரசிகர். மகனுக்கு வசந்த் என்று பெயர் வைத்திருப்பதாகச் சொன்னார்.

எழுபத்தோரு வயதைக் கடந்த இந்த தினத்தில் பி.ஜி.உட்ஹவுசின் over Seventy என்கிற புத்தகம் நினைவுக்கு வருகிறது. அவர் எழுபது வயதைக் கடந்ததும் இந்தப் புத்தகத்தை எழுதினார். தன்னைச் சுற்றிலும் நிகழ்ந்த மாற்றங்களை அவருடைய தனிப்பட்ட நகைச்சுவை உணர்வுடன் எழுதினார். 'என்னப்பா! உனக்கு எழுபது வயதாகிறதாமே! பார்த்தால் 105 வயசான மாதிரி தெரிகிறாய். ஏன் இதைப் பற்றி எழுதி இன்னும் காசு பண்ணவில்லை?' என்று துவங்கி சில அருமையான கட்டுரைகள் எழுதியுள்ளார்.

''அமெரிக்காவில் இப்போதெல்லாம் மக்களுக்கு மரியாதை உணர்வு அதிகமாகிவிட்டது. இப்படித்தான் அன்று நியுயார்க்கில் சாலையில் சென்று கொண்டிருந்த ஒருவனை தன் விரோதி என்று எண்ணிக்கொண்டு ஒருவன் முதுகில் கத்தியால் குத்திவிட்டான். தவறை உணர்ந்ததும் 'ஸாரி' சொன்னான். இப்போதெல்லாம் மரியாதை அதிகமாகிவிட்டது''.

'கின்னஸ் ரிக்கார்டு'க்காக தொடர்ந்து நூறு முட்டை சாப்பிட்டவனை பேட்டி கண்டு எழுதுகிறார்.

''எப்படி இப்படியொரு சாதனை படைக்க வேண்டும் என்கிற உந்து சக்தி உனக்குக் கிடைத்தது?''

'எல்லாவற்றிக்கும் என் அம்மாதான் காரணம். அவளுக்காகத்தான் இதை செய்தேன். மகனே! உலகத்தில் எதாவது சாதிக்க வேண்டும் என்றாள்''

''எல்லாம் சரி. எப்படி நூறு முட்டை சாப்பிட முடிந்தது? என்ன என்ன பயிற்சிகள் செய்தாய்?''

''அது ஒன்றுமில்லை. முதலில் ஒரு முட்டை சாப்பிட்டேன். அதை முழுங்கியதும் இரண்டாம் முட்டையை சாப்பிட்டேன். அதன்பின் முட்டை நம்பர் மூணு.. இப்படி நாற்பத்தைந்தாவது முட்டையில் நிதானித்துக்கொண்டு நாற்ப்பத்தாறாவதுக்குச் சென்றேன்.''

"உன்னால் நாட்டுக்கே பெருமையப்பா" என்று கட்டுரையை முடிப்பார்.

உட்ஹவுஸ் போல் எனக்கு எழுத வராது. எழுபது வயதைக் கடந்ததைப் பற்றி நான் எழுத வேண்டுமென்றால் கவனிக்கும் விஷயங்கள் இவை. மெரினாவில் பலர் என்னை 'உடம்பு பரவாயில்லையா?' என்று விசாரிக்கிறார்கள். 'அதான் குண்டுக் கல் போல முன்னாலேயே நிற்கிறேனே' என்று பதில் சொல்வதற்கு பதிலாக மையமாக தலையாட்டுவேன். பலர், 'இப்ப நீங்க எழுதற 'கண்டதும் கேட்டதும் கல்கில விடாம படிக்கிறேன்' என்பார்கள். சிலர், 'இப்ப எதுல எழுதறிங்க?' என்கிறார்கள். சிலர் மிக அருகே வந்து தொட்டுப்பார்த்து , 'சார்! உங்களை எங்கயோ பாத்த மாதிரி இருக்கே. சட்டுனு நினைவு வரலை. நீங்க யாரு?' என்கிறார்கள். ஒருவர் என்னை கோபத்துடன் அணுகி, 'ஏன் சார், இவ்வளவு வயசான மாதிரி தெரியறீங்க?' என்றார்.

"வயசு எழுபத்து ஒண்ணு ஆய்டுத்து சார் எனக்கு."

"இருந்தாலும் இன்னும் நீங்க சின்னவர்னு ஏன் நினைச்சேன்?"

எனக்கு வயசாவதனால் கோபம் கொள்ளும், கோபம் கொண்ட அனைவருக்கும் நன்றி.

"என் கணவர் ஒரு பெரிய எழுத்தாளராக இருக்கலாம், ஆனால்..."

திருமதி சுஜாதா பகிர்ந்த நினைவுகள்
https://www.nakkheeran.in/24-by-7-news/thamizhagam/writer-sujathas-wife-shares-memories-their-life-together

உயிர்மை பதிப்பகம் சமீபத்தில் நடத்திய 'சுஜாதா விருதுகள்' விழாவில் மறைந்த புகழ்பெற்ற எழுத்தாளர் சுஜாதாவின் மனைவி சுஜாதா ரங்கராஜன் (இவரது பெயர்தான் ரங்கராஜனின் புனைப்பெயர்) பேசினார். அப்போது அவர் எழுத்தாளர் சுஜாதாவுடனான தனது

வாழ்க்கையின் சில நினைவுகளை மகிழ்வுடன் பகிர்ந்துகொண்டார். அவரது பேச்சின் ஒரு பகுதி...




"இந்த விழாவை திரு.ஹமீது அவர்கள் (மனுஷ்யபுத்திரன்) கடந்த பத்து ஆண்டுகளாக மிக சிறப்பாக நடத்தி வருகிறார். அதற்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் கணவர் ஒரு பெரிய எழுத்தாளராக இருக்கலாம், ஆனால், வசந்தபாலன் சொன்னது போல அவர் வாழ்க்கை பூரா 'detached' ஆகத்தான் இருந்தார், எல்லா விஷயங்களிலும். ஒரு சமயம் விநாயகர் சதுர்த்தியின்போது முன்னாடியே பலகாரமெல்லாம் செய்து வைத்துவிட்டு கற்பூர ஆரத்தி மட்டும் காட்டிவிட்டு சாப்பிடுங்கள் என்று கூறிவிட்டு ஊருக்குப் போனேன். ரெண்டு நாள் கழித்து வந்து பார்த்தால் கற்பூரமெல்லாம் அப்படியே இருந்தது. "என்ன, சுவாமிக்கு ஆரத்தி காட்டலையா?"னு கேட்டேன். "நீ ஒன்னும் பயப்படாத பிள்ளையார் ஒன்னும் கோச்சுக்கமாட்டார்"னு சொல்லிட்டார்.

அவருக்கு வீட்டில் என்ன நடக்கிறது என்றே தெரியாது. காலையில் அலுவலகம் போவார், வருவார், வாக்கிங் போவார், ஆறு ஏழு புத்தகங்களை மாற்றி மாற்றிப் படிப்பார். நான் அவருடன் எந்த வாக்குவாதமும் செய்ததில்லை. வாக்குவாதத்தால் எந்த பயனுமில்லை என்று முன்பே சொல்லிவிட்டார். நானும் 'இவர் கூடத்தான் காலம் முழுதும் பயணிக்கப் போறோம். எதுக்கு தேவையில்லாமல் சண்டை போட்டுக்கிட்டு' என்று விட்டுவிட்டேன்.

அவர் கதைகளில் பெண்களைப் பற்றி ரொம்ப நல்லா எழுதுவார், புடவை பற்றி அது இதுன்னு வர்ணனையெல்லாம் நல்லா இருக்கும்.

ஆனா, நிஜத்தில் அவருக்கு ஒரு புடவை கூட வாங்கத் தெரியாது. ஒரு முறை டெல்லி போனார். 'குளிருக்கு ஒரு ஸ்வெட்டர் வாங்கிட்டு வரச் சொன்னேன். அவரும் வாங்கிட்டு வந்தார், கலர் எல்லாம் போன மாதிரி ஒன்னை. எனக்கு அது சுத்தமா பிடிக்கல. இருந்தாலும் வாங்கி வந்தவர் முன்னாடி சொன்னா மனசு நோகுமேனு அவருக்கு முன்னாடி போட்டுகிட்டேன். அப்புறமா எங்க குடியிருப்புல நடந்த லேடீஸ் க்ளப் எக்சிபிஷன்ல அதை கொடுத்துட்டேன். இவர் எந்த காலத்துலயும் அந்த எக்சிபிஷனுக்கு போகாதவர். அன்னைக்கு என்ன தோன்றியதோ, போனார். அந்த ஸ்வெட்டரை பார்த்துட்டார். என்னிடம் வந்து கேட்டார், ;"ஏன் கொடுத்துட்ட?"னு. நான் சொன்னேன், "எனக்கு பிடிக்கல"னு. "சொல்லிருக்கலாம்ல?" என்றார். நான் காரணத்தை சொன்னேன்.

இப்படி, அவருக்கு பெண்களுக்கு எது பிடிக்கும் என்றெல்லாம் பெரிதாகத் தெரியாது. நல்லவேளையாக அவருக்கு பெண் குழந்தையும் கிடையாது. அதனால கல்யாண கவலையும் இல்லை."

கணையாழி கடைசிப் பக்கங்கள்

https://sujathadesikan.blogspot.com/2007/01/blog-post_10.html

இந்த வருடம் தொகுத்த புத்தகம் இது. சுஜாதாவின் முன்னுரை மற்றும் என்னுடைய சிறு குறிப்பு.

சுஜாதா முன்னுரை

கடைசிப் பக்கங்களின் முதல் தொகுப்பு விசா பதிப்பகத்தினர் வெளியிட்டு மூன்று பதிப்புகள் கண்டது. அது முழுமையான தொகுப்பல்ல. கைவசம் இருந்த கணையாழி இதழ்களில் கிடைத்த 72 பக்கங்களின் தொகுப்பாக வந்தது. கணையாழியின் ஆரம்ப காலத்திலிருந்து ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள்வரை நான் கடைசிப் பக்கங்களை ஓரிரு இதழ்கள் தவிர தொடர்ந்து எழுதி வந்திருந்தேன். நூற்றுக்கணக்கில் இருந்தன. அவை அனைத்தையும் என்னால் தொகுத்திருக்க முடியாது. தேசிகன் இந்தப் பணியை மேற்கொள்ள விரும்பினார். கணையாழி இதழ்கள் புதுக்கோட்டை

ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி, டோரதி கிருஷ்ணமூர்த்தி, வெ. சபா நாயகம், வெங்கடேஷ் போன்ற ஆர்வலர்களிடம் இருந்தன. ஆசிரியர் கஸ்தூரி ரங்கன் சில திரட்டுகள் வெளியிட்டார். யாரிடமும் கடைசிப் பக்கங்கள் முழுமையாக இல்லை. மேலும் கடைசிப் பக்கம் என்று சொல்லி முதல் பக்கம், நடுப் பக்கம், பத்தாம் பக்கம் என்று எங்கிலும் எழுதி வந்தேன். சிறுகதைகள் எழுதும்போது நிறுத்திவந்தேன். கோபித்துக்கொண்டால் சில மாதங்கள் விட்டுப்பிடிப்பேன். இதெல்லாம் கடைசிப் பக்கங்களை முழுவதும் தொகுப்பதை சிக்கலான ஒரு தனித்தேடலாக்கின. தேசிகன் அதை மேற்கொண்டார். நான் எழுதிய அத்தனை கடைசிப் பக்கங்களையும் தொகுத்து முடித்து விட்டார். பிரமிக்கத்தக்க சாதனை! எழுத்தாளன்பால் அளவிலாத வாத்சல்யமும் நிறையப் பொறுமை கொண்ட ஒரு வாசகனால் தான் சாத்தியம். என் இனிய நண்பர் தேசிகனுக்கு முதலில் நன்றி சொல்ல வேண்டும். எனக்கே என் கதைகளைப் பற்றி எப்போது எழுதினேன், எந்த இதழில் எழுதினேன் என்று சந்தேகம் ஏற்படும்போது அவரைத்தான் கேட்பேன். அந்த அளவுக்கு நான் எழுதியது அனைத் தையும் ஆராய்ந்து ஆவணப்படுத்தி வைத்திருக்கிறார். அவருக்கு இதழ்களை கொடுத்துதவிய அன்பர்களுக்கும் நன்றி சொல்லவேண்டும். இந்த தொகுப்பை வெளியிட மனுஷ்ய புத்திரன் பிறந்து வரவேண்டி யிருந்திருக்கிறது. ஆம், மனுஷ்ய புத்திரன் பிறப்பதற்கு முன்பிருந்தே நான் கணையாழியில் எழுத ஆரம்பித்துவிட்டேன். இன்றும் மற்ற இதழ்களில் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

என் எழுத்துக்கு புது வாசகர்கள் அவ்வப்போது பிறந்து வருகிறார் கள். இந்த புதிய ஜன்மங்கள்தான் எனக்கு கிடைக்கும் பரிசுகள். இந்தப் பக்கங்கள் அனைத்தையும் பாரபட்சமின்றி முழுமையாக ஒரு வாசகனின் பார்வையிலிருந்து இப்போது என்னால் பார்க்க முடிகிறது. அப்படிப் பார்க்கும் எவருக்கும் என் மனமாற்றங்களும் குணமாற்றங்களும் வெளிப்படும். நாற்பது ஆண்டுகளில் ஒருவனுடைய கவலைகள் மாறுகின்றன; பிடிவாதங்கள் தளர்கின்றன; அழுத்தி சொல்லவேண்டிய விஷயங்கள் குறைந்துபோகின்றன. இல்லையேல் என்னை எப்பொழுதோ நிராகரித்திருப்பார்கள். கணையாழி தமிழ் இலக்கியப் பத்திரிகைச் சூழலில் ஒரு முக்கியமான

முன்னோடி. அதன் வளர்ச்சிக் காலத்தில் கடைசிப் பக்கங்கள் மூலம் கஸ்தூரிரங்கனுக்கு உதவியதில் பெருமைப்படுகிறேன்.

சுஜாதா
சென்னை
டிசம்பர் 2006

முதல் பக்கம்

இது 1965ல் ஆரம்பிக்கப்பட்ட கணையாழி இதழிலிருந்து 1998 வரை உள்ள கணையாழியின் கடைசிப் பக்கங்களின் தொகுப்பு.

முதல் கணையாழி இதழ் 1965 ஜூலை மாதத்தில் புது டெல்லியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. அதே வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் சுஜாதா அவர்கள் 'ஸ்ரீரங்கம் எஸ்.ஆர்' என்ற பெயரில் கடைசிப் பக்கத்தில் எழுத ஆரம்பித்தார். நீர்க்குமிழிகள், பெட்டி, கடைசிப் பக்கம் என்று பல்வேறு தலைப்புகளில் எழுதியுள்ளார். 'கடைசிப் பக்கம்' நிலைத்துவிட்டது.

கணையாழி 40-பைசா இதழிலிருந்து தொகுக்கும்போது, கிடைத்த அனுபவம் சுவாரசியமானது. திரும்பவும் சுஜாதாவின் எழுத்துகளைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சுஜாதாவின் எழுத்துகளை முழுவதும் படித்த எனக்கு அவர் எல்லை எது என்று தீர்மானிக்க முடிவதில்லை. கணையாழியில் ஹெவியான பல விஷயங்களை லைட்டாகச் சொல்லியிருக்கிறார். நாட்டுப் பாடல், புதுக் கவிதை, ஹைக்கூ, விவாதங்கள், சங்கீதம், சினிமா, சமகால சமுதாயம், ஆன்மிகம், இலக்கிய விமர்சனம், விஞ்ஞானக் கதை, எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர், என்று எந்த ஒரு எழுத்தாளரிடமும் இல்லாத 'broad spectrum' இவரிடம் இருக்கிறது.

நான் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் உள்ள இதழ்களிலிருந்து இந்தத் தொகுப்பை ஆரம்பிக்க வேண்டும் என்றபோது சிறிது

அஞ்சினேன். பழைய புத்தகங்களின் வாசனை, உடையும் காகிதம், பைண்டிங்கில் ஊசியால் குத்தப்பட்ட உயிர் எழுத்துகள் என்று இந்தத் தொகுப்பை உருவாக்கிய அனுபவம் வித்தியாசமானது. இந்தத் தொகுப்பு முழுமை பெற உதவியவர்கள் இருவர்.

ஒருவர், புதுக்கோட்டை 'ஞானாலயா கிருஷ்ணமூர்த்தி.' வீட்டிற்கு ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் வீட்டையே நூலகமாக்கியுள்ளார் இவர். தன்னிடம் உள்ள கணையாழி இதழ்களைப் படியெடுத்து அனுப்பி வைத்து உதவினார்.

மற்றவர், 'நேசமுடன்' ஆர். வெங்கடேஷ். என்னை அவர் வீட்டுக்கு அழைத்து அவரிடம் உள்ள இதழ்களை எல்லாம் என்னிடம் கொடுத்துதவினார்.
இவர்களுக்கு என் நன்றிகள்.

அன்புடன்
தேசிகன்

சுஜாதாவிற்கு வந்த ஃபோன் கால்

https://sujathadesikan.blogspot.com/2012/02/blog-post.html



February 27, 2012

13.4.2007 அன்று எழுத்தாளர் சுஜாதாவுடன் பேசியதிலிருந்து சில பகுதிகள்... (ஒலிப்பதிவு செய்யப்பட்டதிலிருந்து)

"....There will be a turning point ... கண்ட்ரோலராக இருந்த போது எனக்கு பல்ராம் என்ற ஒருவர் 'ஏம்பா இங்கே உட்கார்ந்து மன்றாடிக்கொண்டு இருக்கே.. இந்த இன்ஞ்னியரிங் சர்விஸ் எக்ஸாம் வந்திருக்கு. அதை ஏன் நீ எழுத கூடாது.. இன்று கூட அந்த விளம்பரம் வந்திருக்கு பார்த்தியா? என்றார். நான் ஹிந்துவில் ஸ்போர்ட்ஸ் தவிர வேற ஒன்றும் பார்க்கறதில்லை என்றேன். விளம்பரம் வந்திருக்கு கடைசி தேதி இன்று தான் என்று நினைக்கிறேன்... நீ இன்ஞ்சினியரிங் படிச்சிருக்கே எதுக்கு டிராஃபிக் கண்டரோல் பண்ணிக்கொண்டு இருக்கே என்றார்.

I was sort of drifting around.. not doing much.. and the job was a little boring... this was just before marriage. it was a casual phone call. அதற்கு அப்பறம் UPSC விளம்பரம் வாங்கிக்கொண்டு இன்ஞ்சினியரிங் சர்விஸிஸ் தேர்வுக்கு அப்ளை செய்தேன். ஆகஸ்ட் 1960 என்று நினைக்கிறேன். அது தான் முதல் எலக்ட்ரானிக்ஸில் இன்ஞ்சியரிங் சர்வீஸ் எக்ஸாம் அதற்கு முன்னாடி இன்ஞ்னியரிங் சர்வீஸ் எக்ஸாம் General தான்.

இந்த(எலக்டரானிக்ஸ்) எக்ஸாம் ஆல் இந்தியா ரேடியோ, சிவில் ஏவியேஷன் போன்றவைக்கு விண்ணப்பிக்கலாம். எக்ஸாம் எழுதுவதற்குத் திரும்ப டெக்னிகல் புத்தகம் படிக்க ஆரம்பித்தேன். யுனிவர்சிட்டி லைப்பரியில்... பிறகு ஹைதராபாத் டிரான்ஸ்ஃபர் ஆனேன். அங்கே இருக்கும் போது ரிசல்ட் வந்து... ஒரு வருஷம் கழித்து அப்பாயின்மெண்ட் கிடைத்தது - டெக்னிகல் ஆபிஸர் சிவில் ஏவியேஷனில். அங்கே தான் என் Career முழுமையாக மாறிவிட்டது. டெக்னிகல் ஆபிஸராக இருந்ததால் நான் டெல்லிக்கு டிரான்ஸ்பர் ஆனேன். Technology content in my job was much much higher. I had to install navigation equipment. அந்த சமயம்(70'ல்) பாரத் எலக்டரானிக்ஸ் விளம்பரம் வந்தது.. அங்கே போனேன். அங்கேயும் முழுவதும் டெக்னிகல் சமாச்சாரம். Microprocessor... R&D instumention... voting machine.. இதை எல்லாம் யோசித்துப் பார்த்தால் இவை எல்லாம் என் வாழ்க்கையில் நடந்தது ஒரு ஃபோன் காலினால்!.

நான் சில சமயம் நினைத்துப் பார்ப்பேன். அந்த பல்ராம் என்னை கூப்பிடாமல் இருந்திருந்தால் … அதுவும் விண்ணபிக்கக் கடைசி நாள் அது… Opportunities in life arrive unwittingly… அதாவது அறிவிக்காமல் வருகிறது.. ஏதோ ஒரு விதத்தில் இதை ஒரு தெய்வாதீனம் என்று கூட சொல்லலாம். வாழ்க்கையில் திரும்பிப் பார்க்கும் போது தான் உங்களுக்கு இது புரிகிறது. அந்த சமயத்தில் புரியாது. சாதாரண நிகழ்வு போல இருக்கும். . இதைப் பற்றி எழுதியிருக்கேனா என்று தெரியவில்லை…… அதை நீங்களே எழுதிவிடுங்கள்.. Opportunity எப்போது வரும் என்று நமக்கு தெரியாது. எனக்கு மட்டும் இல்லை….நிறைய பேருடைய வாழ்க்கையில் இந்த மாதிரி நடந்திருக்கும்…. உங்க வாழ்க்கையில்… கூட யோசித்து பார்த்தால் ஏதாவது இந்த மாதிரி நடந்திருக்கும்.

24 ரூபாய் தீவு – சுஜாதா

https://koottanchoru.wordpress.com/2010/03/25/24-%E0%AE%B0%E0%AF%82%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%AF%E0%AF%8D-%E0%AE%A4%E0%AF%80%E0%AE%B5%E0%AF%81-%E0%AE%9A%E0%AF%81%E0%AE%9C%E0%AE%BE%E0%AE%A4%E0%AE%BE/

சுஜாதாவின் '24 ரூபாய் தீவு' – ஒரு த்ரில்லர் / துப்பறியும் / தனி மனித துயரம் என்று எந்த வகையிலும் 'categorise' செய்ய முடியாத அற்புதமான நாவல். இது குமுதத்தில் தொடர்கதையாக வெளிவந்த போதே கன்னடத்திலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு பெரும் வரவேற்பை பெற்றதாம். அதை தொடர்ந்து கன்னடத்தில் 'ஒண்டித்வனி' என்ற பெயரில் ஏகப்பட்ட வணிகரீதியான மாற்றங்களுக்கு உட்பட்டு திரைப்படமாக எடுக்கப்பட்டு தோல்வியடைந்ததாம். இந்த நாவலை 'அப்படியே' எடுத்தால் நன்றாக இருக்கும் என்று கமல்ஹாஸன் அடிக்கடி சொல்வார் என்று சுஜாதா தன் நாவலின் முன்னுரையில் எழுதியிருக்கிறார். 120 பக்கங்களில் ஒரு நிருபரின் அபாயகரமான வாழ்க்கையை அச்சு அசலாக நம் கண் முன்னாடி கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார் சுஜாதா. நம்புங்கள்... இந்த நாவலை படிப்பது ஒரு roller-coaster ride-க்கு சமானம்.

தின ஒளியில் நிருபராக வேலை பார்க்கும் விஸ்வநாதனுக்கு ஒரு பெண்ணிடம் இருந்து ஃபோன் கால் வருகிறது. குறித்த நேரத்துக்கு விஸ்வநாதன் அங்கு போகும்போது அந்தப் பெண் கொலை செய்யப்பட்டு இருக்கிறாள். போலீஸுக்கு தகவல் தெரிவித்துவிட்டு வீட்டுக்கு திரும்பி வரும் விஸ்வநாதன், அந்த ஃபோன் கால் தன் வாழ்க்கையை எப்படியெல்லாம் புரட்டி போடபோகிறது என்று எதிபார்க்கவில்லை. அந்த கொலை பற்றி அவன் எழுதும் செய்திகளால் அவன் ஓவர்நைட்டில் புகழடைகிறான். அரசியல் ரீதியான மாற்றங்கள் ஏற்படுகின்றன. கூடவே எதிரிகளும் முளைக்கிறார்கள்.

இது தெலுங்கு டப்பிங் தனமான பூனை புலியாகி திருப்பி தாக்கும் கதை அல்ல. விதி வசத்தால் ஓட ஓட விரட்டியடிக்கப்படும் ஒரு சாதாரண மனிதனின் அல்லல். அரசியல்வாதிகளின் கைப்பாவையாய் செயல்படும் அரசு இயந்திரங்களும், அரசியல் திரையில் பொம்மலாட்டம் காட்டும் ராஜதந்திரிகளும், சந்தர்ப்பம் கிடைத்தால் யார் முதுகிலும் ஏறி மேடை போடும் தொழிலாளர் இயக்கங்கள், இவர்களுக்கிடையே சிக்கிக் கொண்டு போராடும் ஒரு சாமானியனின் விதி. இந்த நாவலின் சிறப்பு என்று சொன்னால், கடைசிவரை எதிரி கண்ணுக்கு தெரியாமல் இருப்பது தான். ஒரு கட்டத்தில் நமக்கே

விஸ்வநாதன் மீது 'இவனுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை?' என்று ஒரு கையாலாகாத கோபம் வருகிறது.

கடைசி 20 பக்கங்களில் கணேஷும் – வசந்தும் வருகிறார்கள். ஒரே பாராவில் வசந்த் மொத்த புதிரையும் அவிழ்த்துவிடுகிறான். முடிவு யாரும் எதிர்பாராதது என்றபோதும் விஸ்வநாதன் அந்த மனநிலைக்கு வருவான் என்பதும், அவன் வாழ்க்கையில் விளையாடும் சூத்ரதாரி யார் என்பதும் இந்த நாவலை படிக்கும் யாருமே யூகிக்ககூடியது என்பதால் பெரிய ஆச்சரியம் இல்லை. ஆனால் விஸ்வநாதனின் பத்து வயது தங்கை பலாத்காரம் செய்யப்படுவதும், அதை தொடர்ந்து வரும் காட்சிகளும் உண்மையிலேயே தூக்கத்தை கொள்ளையடிக்கக் கூடிய சம்பவங்கள்.

சுஜாதாவே சொல்வது போல இது சினிமாவாக 'அப்படியே' எடுக்க மிகவும் தோதான கதை. சமயத்தில் பேனாவை அமிலத்தில் தோய்த்து எடுத்தது போல படு காட்டமாக எழுதியிருக்கிறார். சில சமயங்களில் எனக்கு புத்தகத்தை மூடி வைத்து விடலாமா என்று கூட தோன்றியது. ஆனால் அது தான் சுஜாதாவின் ஸ்டைல் – சுற்றி சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்துக்கு வருவது. இரண்டாவது பாதியில் நடப்பவை பலமுறை படித்துவிட்ட புளித்துபோன 'cliched' சம்பவங்கள். ஆனால் கிளைமேக்ஸில் ஜிவ்வென்று விட்டதை பிடித்து விடுகின்றார். அது மட்டும் தான் இந்த நாவலின் பலவீனம்.

சுஜாதாவுக்கு பெயரையும் புகழையும் தேடித்தந்த & வாசகர்களால் மிகவும் விரும்பப்படும் படைப்புக்களில் ஒன்று இந்த '24 ரூபாய் தீவு'. ஒரு முறை தாராளமாக படிக்கலாம். அவரின் 'பிரிவோம் சந்திப்போம்' படமாவதை போல, இதையும் 'அப்படியே' யாராச்சும் படமாக எடுப்பார்கள் என்று நம்பலாம்.

நன்றி – மகேஸ்வரன் http://www.maheshwaran.com


சுஜாதா
பதில்கள்


என்றென்றும்
சுஜாதா




SUJATHA-வின் விசித்திர நிகழ்வுகள்
BW WIFE REVEALS








சுஜாதா
எனும்
நான்
NEWS 7



















சுஜாதா (எஸ். ரங்கராஜன், 1935–2008 என்பவரின் புனைப்பெயர்) அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மர்மம் ஆகியவற்றை ஒன்றிணைத்து தமிழ் இலக்கியத்தில் புரட்சியை ஏற்படுத்திய ஒரு முன்னோடித் தமிழ் எழுத்தாளரும் மின்னணுப் பொறியாளரும்ஆவார் . ஒரு சிறந்த எழுத்தாளராக, அவர் செயற்கை நுண்ணறிவு (AI), கணினிகள் மற்றும் நானோ தொழில்நுட்பம் போன்ற சிக்கலான தலைப்புகளை நாவல்கள் மற்றும் கட்டுரைகள் மூலம் எளிதில் புரியும்படி செய்து, தமிழ் ஊடகங்களில் அறிவியலை குறிப்பிடத்தக்க அளவில் பிரபலப்படுத்தினார்.

அறிவியல் எழுத்தாளராக முக்கியப் பங்களிப்புகள்:

- **அறிவியல் புனைகதை முன்னோடி:**இவர் , 1970கள் மற்றும் 80களில் கணினிமயமாக்கலைக் கணித்து,*'என் இனிய இயந்திரா'* (என் அன்பு ரோபோ) மற்றும் *'மீண்டும் ஜீனோ'* உள்ளிட்ட தமிழில் மிக முக்கியமான அறிவியல் புனைகதைப் படைப்புகளை எழுதினார்.
- **எளிதில் புரியும் அறிவியல் எழுத்து:**அவர் ஆனந்த விகடன் *போன்ற பிரபலமான தமிழ் இதழ்களில்* , கணினிப் புரட்சிகள் மற்றும் மின்னணுவியல் போன்ற தலைப்புகளை உள்ளடக்கி, பாமர மக்களுக்காகத் தொழில்நுட்பம் குறித்த தொடர் கட்டுரைகளை எழுதினார்.
- **விருதுகள்:** அறிவியலைப் பிரபலப்படுத்த அவர் ஆற்றிய முயற்சிகளுக்காக, 1993-ஆம் ஆண்டில் இந்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்திடமிருந்து விருது பெற்று அங்கீகரிக்கப்பட்டார்.
- **தொழில்நுட்ப நிபுணத்துவம்:** பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் மின்னணுப் பொறியாளராக, அவர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் (EVMs) உருவாக்கத்திற்குப் பங்களித்தார்.
- **இலக்கியப் படைப்புகள்:** அவர் தனது பணி வாழ்க்கை முழுவதும் 100க்கும் மேற்பட்ட நாவல்களையும், 250 சிறுகதைகளையும், பல அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார்.

அறிவியல் முன்னேற்றங்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு பாலமாக விளங்கிய அவர், தமிழ் இலக்கியத்தில் **'அறிவியல் நாயகன்'** எனப் பரவலாகப் போற்றப்படுகிறார்.

மீண்டும் ஜீனோ

https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AE%E0%AF%80%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%9F%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D_%E0%AE%9C%E0%AF%80%E0%AE%A9%E0%AF%8B

மீண்டும் ஜீனோ எனப்படுவது மறைந்த தமிழ் எழுத்தாளர் சுஜாதாவால் 1987 இல் ஆனந்த விகடன் இதழில் தொடராக எழுதப்பட்ட ஒரு அறிவியல் புனைகதையாகும். பின்னர் இது புத்தகமாக வெளியிடப்பட்டது. இந்தப் புத்தகம் என் இனிய இயந்திரா எனும் புதினத்தின் தொடர்ச்சியாக எழுதப்பட்டுள்ளது.

திரைப்படம்

என் இனிய இயந்திரா மற்றும் மீண்டும் ஜீனோ ஆகிய நாவல்களைத் தழுவியே திரைப்பட இயக்குநர் சங்கரின் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து 2010 ல் வெளிவர இருக்கும் எந்திரன் திரைப்படம் அமைந்திருப்பதாகவும் கொலிவூட் திரையுலகில் பேசிக்கொள்ளப்பட்டது.











என் இனிய இயந்திரா



என் இனிய இயந்திரா

நூலாசிரியர்	சுஜாதா
நாடு	இந்தியா
மொழி	தமிழ்
வகை	புதினம்
வெளியீட்டாளர்	கிழக்குப் பதிப்பகம்[1], விசா பப்ளிகேஷன்ஸ்[2]
ISBN	978-81-8493-555-4

என் இனிய எந்திரா எனப்படுவது மறைந்த தமிழ் எழுத்தாளர் சுஜாதா எழுதிய ஒரு அறிவியல் புனைகதை ஆகும். 1980 களில் பிற்பகுதியில் எழுதிய இந்தப் புத்தகம் ஆனந்த விகடன் இதழில்[3] ஒரு தொடராக வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நாவலின் தொடர்ச்சியாக மீண்டும்

ஜீனோ எனும் புத்தகத்தையும் 1987ல் [4] ஆசிரியர் சுஜாதா எழுதி வெளியிட்டார்.

கதைப் பின்னணி

கி.பி 2021 இல் நடப்பதாக இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. ஜீவா எனும் ஒரு சர்வாதிகாரியின் ஆட்சியில் இந்தியத் துணைக்கண்டம் இருப்பதாக கதையமைப்பு செய்யப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கை அமைப்பு, வாழ்நாட்கள், பெற்றுக் கொள்ளும் குழந்தையின் பால், எண்ணிக்கை என்று அனைத்து விடயங்களிலும் இந்த சர்வாதிகாரி தலைமையிலான ஆட்சி கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இதில் இருந்து நாட்டை மீட்க புறப்படும் ரவி, மனோ எனும் இரு புரட்சிக்காரர்களும் இவர்களுடன் சந்தர்ப்ப சூழ்நிலையால் இணைந்து கொள்ளும் நிலா எனும் பெண்ணைச் சுற்றியும் கதை நகர்கின்றது.

இந்தக் கதையில் முக்கியமான பாத்திரமாக ஜீனோ எனும் இயந்திர நாய் காட்டப்படுகின்றது. சாதாரண செல்லப்பிராணிக்கு பிரதியீடாகச் செய்யப்பட்ட இந்த இயந்திர நாய் மெல்ல மெல்ல தன் அறிவை விருத்தி செய்வதுடன் மனிதர்களைப் போல சிந்திக்கவும் தொடங்குகின்றது. ஆரம்பத்தில் பயம், இரக்கம், பாசம் போன்ற உணர்வுகளை அறியாதிருந்த நாய் மெல்ல மெல்ல அனைத்து மனித இயல்புகளையும் பெறத் தொடங்குகின்றது.






சுஜாதா
என் இனிய
இயந்திரா
Story Side






என் இனிய
இயந்திரா


அறிவியலையும் கற்பனையையும்
மிகச்சரியாக கையாளக்கூடிய வித்தை
தெரிந்த சிலரில் முக்கியமானவர்
சுஜாதா. 1986 வாக்கில் என் இனிய
இயந்திரா என்ற தொடர்கதையை
சுஜாதா எழுதினார். அதன் கதைக்கரு,
அடுத்த 40 ஆண்டுகளில் அதாவது
2021 இல் இந்த உலகம் எத்தகைய
தொழில்நுட்ப மாற்றங்களை சந்தித்து
இருக்கும் என்பது தான்.
சுஜாதா
WWW.PAMARANKARUTHU.COM


என் இனிய இயந்திரா
சுஜாதா
en iniya iyanthira

(😊)(😊)(😊) சுஜாதா (😊)(😊)(😊)